பக்கங்கள்: பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | பங்குனி 05 | வியாழக்கிழமை | (18-03-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 90




## ஆட்சி அமைப்போருடன் பேச்சுத் தொடரும்

# விடுதலைப் புலிகள் - கருணா பிளவு

# சமாதானப் பேச்சைப் பாதிக்காது

### ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கருத்து

(லண்டன்)

**கருணாவின் பிளவு அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எந்தவிதமான மாற்றங்களையும் ஏற்படுத்தமாட்டாது.**

**இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

(10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்கூட்டமைப்பு - ஈ.பி.டி.பி. கந்தர்மடத்தில் முறுகல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பழம் வீதியில் நேற்று தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களுக்கும் ஈ.பி.டி.பியினருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது. இதனையடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

இதேவேளை, ஈ.பி.டி.பியினர் தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு பிரசாரத்தில் ஈடுபட்டதாகவும், அதனை நிறுத்தி அவ்விடத்தைவிட்டு அகன்று செல்லுமாறு பல்கலைக்கழக மாணவப் பிரதிநிதிகள் கோரியதாகவும், அதனையடுத்து ஈ.பி.டி.பியினர் மாணவர்களைத் தாக்க முற்பட்டதாகவும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மேற்படி சம்பவத்தைக் கண்டித்து வெளியிட்ட கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தை யாழ். உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவன மாணவர் ஒன்றியமும் கண்டித்து

(10ஆம் பக்கம் பார்க்க)

## கருணா யாரென வினவுகிறார் அமெரிக்க தூதுவர் லங்ஸ்பேட்

### புலிகளின் குற்றச்சாட்டுக்கும் அவர் மறுப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து கருணா பிரிந்து சென்றதற்கு அமெரிக்காவே காரணம் எனத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெறி லங்ஸ்பேட் மறுத்துள்ளார்.

நேற்று அமெரிக்கத் தூதரகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்த மறுப்பை வெளியிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கரிகாலன் யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த திங்கள் அன்று நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கருணா பிரிந்துசென்றதற்கு அமெரிக்காவே பின்னணியாக இருக்கிறது என்று குற்றஞ்சாட்டியிருந்தார். இக்குற்றச்சாட்டு தொடர்பாக ஊடகவியலாளர்கள் அமெரிக்கத் தூதுவரிடம் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த தூதுவர், கருணா என்பவர் யார்? என வினவினார். விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் அமெரிக்கப் பிரதிநிதிகள் எவரும் இரகசியப் பேச்சுக்களையோ சந்திப்புக்களையோ நடத்தவில்லை என்றார்.

இதேவேளை, இலங்கையின் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு 6 லட்சம் அமெரிக்க டொலர் நிதியுதவியாக வழங்கியுள்ளதாகவும் தூதுவர் அங்கு தெரிவித்தார். (த)

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிமக்கள் தேர்தலில் வாக்களிக்கும் சாத்தியம்

### இறுதி முடிவை தேர்தல் ஆணையாளர் அறிவிப்பார்

(கொழும்பு)

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மக்கள் வாக்களிப்பது தொடர்பான இறுதி முடிவு தேர்தல் ஆணையாளரால் நாளை வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட அரச அதிபர்களுக்கும், வன்னி மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மற்றும் பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கும் இடையில் நேற்று வவுனியாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இது தொடர்பான சாதகமான முடிவுகள் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா வடக்கு, முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கான வாக்குச்சாவடிகள் ஓமந்தை தமிழ் மகா வித்தியாலயத்தில் அமைப்பதெனவும், வாக்காளர்களுக்கான போக்குவரத்து வசதிகளை வவுனியா மாவட்ட செயலகம் மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ள

(10ஆம் பக்கம் பார்க்க)

### புலிகள் மீது சோதனைக் கெடுபிடி

(கிளிநொச்சி)

முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மீதான சோதனைக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரும் போராளிகளின் ஆவணங்களை துருவித்துருவி ஆராய்வதுடன், அவர்களைச் சீண்டும் நடவடிக்கைகளிலும் படையினர் ஈடுபட்டு வருவதாக விடு

(10ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவத்தரப்புடன் நாளை சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். தேர்தல் மாவட்டத்தில் புலிகளின் நிர்வாகப் பகுதியில் உள்ள மக்கள் வாக்களிக்க வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பது தொடர்பாக ஆராயும் உயர்மட்ட மாநாடு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுடன் கலந்துரையாடி வாக்காளர்கள், வேட்பாளர்கள், தேர்தல் முகவர்கள் ஆகியோரின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண

(10ஆம் பக்கம் பார்க்க)

## 'பெவ்ரல்' பணிப்பாளர் இன்று யாழ்.வருகிறார்

(கொழும்பு)

தேர்தலை கண்காணிக்கும் பெவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட்றிக்கோ இன்று யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார்.

பொதுத்தேர்தலுக்கு இன்னும் இரு வாரங்களே உள்ள நிலையில் வடபகுதியில் தேர்தல் தினத்தன்று தேர்தல் கண்காணிப்புப் பணிகளை ஒழுங்குபடுத்தும் நோக்குடனேயே அவரது விஜயம் அமைகின்றது.

யாழ்ப்பாணம் வருகைதரும் அவர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸாருடனும் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராயவுள்ளார். இதேவேளை, நேற்றையதினம் வவுனியாவுக்கு வருகை தந்த கிங்ஸ்லி றொட்றிக்கோ பொலிஸ் அதிகாரிகளுடனும், பொது அமைப்புக்களுடனும் கலந்துரையாடினார்.

இதில் வன்னிமாவட்டத்தில் 192 தேர்தல் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், 3 வாகனங்களில் தலா 5 கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடவுள்ளனர். (த)



திரு. வீ. ஆனந்தசங்கரி
(முன்னாள் பா.உ. யாழ்ப்பாணம்)
இல. 4

தமிழினத்தின் விடியலுக்கான தீர்வு
சுயநிர்ணய உரிமையுடனான
சுதந்திர வாழ்வு.....
வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான
சுயேச்சைக்குழு - 01



X 4 8



குணானந்தன்
(வங்கி அதிகாரி)
இல. 8

(சி-7445)



நாடாளுமன்ற பொதுத் தேர்தல்-2004
அஞ்சி நடுங்கும் வாழ்நிலை மாற...
அனைத்துக்கும் 'வரி' கொடுக்கும் சூழல் மறைய...
எஞ்சியுள்ள உயிர்களையும் உடைமைகளையும் காக்க...
துணிவுடன் செயல்பட வேண்டும்...

சிந்தித்து வாக்களியுங்கள்!
வீணையே உங்கள் தெரிவாகட்டும்!!



X

(சி-7442)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

# இந்தியப் படைக்கு தூபி அமைக்க தமிழர்கள் அனுமதிக்க மாட்டார்கள்

## இராணுவ ஆய்வாளர் கருத்து

(லண்டன்)

"வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிகாக்கும் படையினருக்கும்இடையே இடம் பெற்ற மோதல் சம்பவங்களில் உயிரிழந்த இந்திய அமைதி காக்கும் படையினருக்கு கொழும்பில் நினைவுத் தூபிகள் அமைப்பதை தமிழ் மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்".

இவ்வாறு தெரிவித்துள்ளார் கொழும்பில் உள்ள இராணுவ ஆய்வாளர் சிவராம்.

1987 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் உயிரிழந்த இந்திய அமைதிகாக்கும் படையினருக்கு நினைவுத் தூபி அமைப்பதை தமிழ் மக்கள் வரவேற்பார்களா? என்பது பற்றி லண்டன் பி.பி.சி.தமிழ் சேவைக்கு வழங்கிய விசேட செவ்வியின் போதே இராணுவ ஆய்வாளர் இதனைத் தெரிவித்தார். அவர் இது பற்றி தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

சிங்கள மக்களைப் பொறுத்த வரையில், இந்திய இராணுவ வீரர்களுக்கும் கொழும்பில் நினைவுத் தூபி அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்கள் என்றே எதிர்பார்க்கின்றேன்.

ஏனெனில் சிங்கள அரசியல் வாதிகளின் வேண்டுகோளை ஏற்றே இந்திய அமைதிகாக்கும் படை இலங்கை வந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராடியது.

இந்தப் போராட்டத்தினால் சிங்கள மக்கள் எவருமே பாதிக்கப் படவுமில்லை.

ஆனால் இந்திய அமைதிகாக்கும் படையினரால் தமிழ் மக்கள் பெரும் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்டனர்.

பல இளைஞர்கள் இந்திய படையினரால் கொலை செய்யப் பட்டனர். இதனால் இந்திய அமைதிகாக்கும் படையினரின் அடாவடித்தனங்கள் யாவும் தமிழ் மக்களின் மனங்களில் மாறாத காயங்களாக இருக்கின்றன.

இதேவேளை, இந்திய படையினருக்கு நினைவுத்தூபி அமைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவோ எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

ஏன், இந்தியாவை விமர்சித்து வந்த ஜே.வி.பி போன்ற தென்னிலங்கை இனவாதம் பேசுகின்ற அரசியல் கட்சிகள் கூட இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்றார். (து-62,10)

### மூக்குக் கண்ணாடிகள் அன்பளிப்பு

(யாழ்பாணம்)

கனடா திருவடி நிலையத்தைச் சேர்ந்த இராமசந்திரன் ஒரு தொகுதி மூக்குக் கண்ணாடிகளை வடமாநில இந்து மாமன்றத்தினரிடம் கையளித்துள்ளார்.

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு கொடுப்பதற்கென கையளிக்கப்பட்டுள்ள மூக்குக் கண்ணாடிகள் உரிய காலத்தில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (து-8)

### பதிவுகளை மேற்கொள்க

(சுதுமலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள நவாலி வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் சமுர்த்தி நிவாரண முத்திரை வழங்குவதற்கான இறுதிப்பதிவுகளை இன்று முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை மேற்கொள்ளுமாறு அப்பகுதியின் சமுர்த்தி அபிவிருத் அலுவலர் தெரிவித்துள் ளார்.

இப் பதிவை மேற்கொள்ள வருபவர்கள் சமுர்த்தி வங்கி புத்தகம், குடும்பப்பதிவு அட்டை, அடையாள அட்டை என்பவற்றுடன் காலை 8 மணி முதல் பி.ப. 1.00 மணி வரை நவாலி வடக்கு அலு வலகத்தில் பதிவுகளை மேற் கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (து-252)

# மலையக மக்களின் வாழ்க்கை அரசியல் மயப்படுத்தப்படவேண்டும்'

## அமைச்சர் சந்திரசேகரன் வலியுறுத்து

(தலவாக்கல)

மலையகத்தில் ஏற்பட்டுவரும்



அரசியல் மாற்றங்களை உன்னிப்பாக ஆவதானித்தே மலையக மக்கள் முன்னணி தனது வேலைத திட்டங்களை நகர்த்துகிறது என அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

அக்கரப்பத்தானை பெல்மொரல் தோட்டத்தில் மின்சாரத் திட்டம் ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் உதவித்திட்டங்களும், மேம்பாட்டு நடவடிக்கைகளும் மலையகப் பகுதிகளிற்கு முழுமையாகக் கிடைக்கவில்லை என்றும் அதனால் தோட்டத் தொழிலாளர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கம் ஏனைய பிரதேசங்களுக்கு செய்வது போலவே மலையகப் பிரதேசத்தையும் அபிவிருத்தி செய்யவேண்டும். அரசின் புதிய புதிய அபிவிருத்தித்திட்டங்கள்நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இதற்காக மலையக மக்கள் அரசியல் விழிப்புணர்வு கொள்வது அவசியம். இது மலையக மக்களின் வாழ்வில் நிச்சயமாக ஒரு மாற்றத்தை உருவாக்கும்.

எனவேதான் மலையக மக்களின் வாழ்க்கைக் கட்டமைப்பு அரசியல் மயப்படுத்தப்படவேண்டும் என்பதை மலையக மக்கள் முன்னணி வலியுறுத்துகிறது என அவர் மேலும் குறிப்பிட்டரர். (து-4)

# ஜனாதிபதியின் குற்றச்சாட்டுக்கு டிரோன் பெர்னாண்டோ மறுப்பு

(கொழும்பு)

ஐ.தே.மு. தேர்தல் பிரசாரங்களில் கலந்து கொள்வதற்காக இலங்கைக்கான மலேசிய உயர் ஸ்தானிகர் றோசி சேனாநாயக்கா மலேசியாவிலிருந்து இலங்கை வந்துள்ளார் என ஜனாதிபதி தெரிவித்த குற்றச்சாட்டுகளை வெளியுறவுத்துறை அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ மறுத்துள்ளார்.

இது குறித்து அவர் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில், மார்ச் 12 ஆம் திகதியிடப்பட்டு நீங்கள் அனுப்பிய கடிதத்தில் றோசி சேனாநாயக்க மலேசிய வர்த்தக குழுவினர் சகிதம் இங்கு வந்து தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுகிறார் என நம்பகரமான தகவல்கள் தெரிவிப்பதாக கூறியிருநதீர்கள். இது பற்றி நான் றோசி சேனாநாயக்காவிடம் வினாவிய போது அவர் தனக்கும் இலங்கையின் அரசியல் நடவடிக்கைகளுக்கும் எவவித தொடர்பும் கிடையாது என மறுத்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் வர்த்தக கருத்தரங்கு ஒன்றை நடாத்துமாறு றோசி சேனாநாயக்காவடம் வேண்டுகோள விடுக்கப்படதையடுத்து அதற்கான ஆயத்தங்களையே தற்போது அவர் மேற்கொண்டுவருகிறார். அத்துடன் இலங்கையர்களுக்கு மலேசியாவில் தொழில் வாய்ப்பை வழங்குவதற்கு மலேசிய அரசாங்கம் சம்மதித்துள்ளதனால் அதற்காக பயிற்சி நிலையங்களை ஸ்தாபிக்குமாறும் மலேசிய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தைக் கோரியுள்ளன. (து-6)

# ஐ.தே.முவின் சமாதான முயற்சிக்கு ஸ்ரீ.மு.கா. ஆதரவாகவே செயற்படும்

## ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக பேச்சு வார்த்தையில் ஈடுபட்ட சகல தரப்பினருமே பாரிய சவால்களை எதிர்நோக்கியதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஹக்கீம்,

கடந்த இரண்டு ஆண்டு காலப் பகுதியில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மேற்கொண்டு வந்த சமாதான முயற்சிகளுக்கு எமது கட்சி உந்து சக்தியாக இருந்துள்ளது என்றும்,

பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்லும் போது கருத்து முரண்பாடுகள் ஏற்படலாம். ஆயினும் சமாதானத்தை நிலைப் படுத்துவதில் உள்ள சவாலாகவே அவற்றை கருதவேண்டும் என்றும் தெரிவித்தார். (து-61,8)

# வட-கிழக்கு இணைந்த அலகினை கூட்டமைப்பினர் கோரக் கூடாது

## மட்டு .வேட்பாளர்களுக்கு கருணா எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்கள் மாவட்ட அபிவிருத்தியை நோக்காகக் கொண்டுடே செயற்படவேண்டும் என கருணா அணியினர் உத்தரவிட்டுள்ளனர்.

இவர்கள் வடக்கு - கிழக்கு இணைந்த அலகினை தமது பிரசாரத்தின் போது பயன்படுத்தக் கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ் உத்தரவு கடந்த திங்கட் கிழமை கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற பதத்தினை தமது பிரசாரத்தின் போது தமிழரசுக் கட்சியினர் பயன்படுத்தக் கூடாது என கருணா அணியினர் உத்தரவட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்கள் வேறு மாவட்டங்களுக்குச் சென்று பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது எனவும் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இவ் உத்தரவினையடுத்து நேற்று முன்தினம் திருகோணமலையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட முதனமை வேட்பாளர் ஜோசப் பரராஜசிங்கம் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# கட்சிப் பிரமுகர்களுடன் செயலக அதிகாரிகள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 13 வது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகளின் முக்கியஸ்தகர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களிற்கும் யாழ்.செயலக அதிகாரிகளிற்கும் இடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினிஅம்மா திலகநாயகம் போல், யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.நடராஜா ஆகியோரும் கட்சிப் பிரமுகர்கள் சார்பில் தமிழ்த் தேசியக கூட்டமைப்பு மற்றும் சுயேட்சை குழுக்கள், ஏனைய கட்சிகளது பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இதில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பித்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட 426 வாக்காளர்களும் எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி வாக்களிக்கலாம் எனவும் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெறாத இவர்கள் தேர்தல் கடமையில் இருந்து நீக்கப்படுவர் எனவும் தீர்மானிக் கப்பட்டது.

அத்துடன், வன்முறைகள் அற்ற தேர்தலை நடத்துவதற்குரிய ஒத்துழைப்பும் கோரப்பட்டது. வேட்பாளர்களின் வதிவிடவிலாசங்கள் மாறும் போது அதுபற்றி தமக்கு அறிவிக்கப்படல் வேண்டும் என அரச அதிபர் கோரிக்கைவிடுத்தார்.

இவற்றைவிட வேட்பாளர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்குதல். அவர் வாக்கெடுப்பு பிரிவு முகவர்கள் மற்றும் வாக்குச் சாவடி முகவர்களை அங்கீகரித்தல், கட்சிகளுக்குச் சார்பாக இராணுவம் பிரசாரம் செய்தல் போன்ற பலவேறு விடயங்கள் பற்றியும் இங்கு பிரஸ்தாபிக்கப்பட்டு சில முக்கிய தீர்மானங்களும் மேற் கொள்ளப்பட்டன. (தி-19,3)

# மக்கள் விடுதலை முன்னணியிடம் பெருமளவு ஆயுதங்கள் உள்ளன

## அமைச்சர் ராஜித குற்றச்சாட்டு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி தொடர்ந்தும் ஆயுதங்களை வைத்திருப்பதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ரி 56 ரகத்துப்பாக்கிகள் 78, எஸ்.எல்.ஆர் துப்பாக்கிகள் 60, எஸ்.84 ரகத்துப்பாக்கிகள் 34, எஸ்.எம்.ஜி ரகத்துப்பாக்கிகள் 13, ரி 81 ரகத்துப்பாக்கிகள் 8, எல்.எம்.ஜி ரகத்துப்பாக்கிகள் 11, எவ்.எல்.சி ரகத்துப்பாக்கிகள் 6, எம்,பி.ரக ஆயுதங்கள் 3, எஸ்.ஏ.ஆர். ரக ஆயுதங்கள் 4 உட்பட 222 துப்பாக்கிகள் ஜே.வி.பியிடம் இருப்பதாக ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இதனைவிட பெருமளவு ஆயுதங்களும் ஜே.வி.பியிடம் இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

கருணாவின் செயற்பாட்டினால்

# கூட்டமைப்பின் வேட்பாளர்கள் இருகூறுகளாக பிரியும்நிலை

(கொழும்பு)

கருணாவின் செற்பாடுகள் காரணமாக தமிழத்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் இரு கூறுகளாகப் பிரியும் சூழ்நிலை எழுந்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக போட்டியிடும் வேட்பாளர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்ற கருணாவின் சில செயற்பாடுகள, கட்டளைகள் காரணமாக சுதந்திரமாகப் பிரசாரங்களை மேற கொள்ள முடியாதிருக்கின்றார்கள்.

அத்துடன் வடகத்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதாலும் கிழக்கு கருணாவின் கட்டுப்பாட்டில் இருப்பதாலும் அங்கு போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் இரு கூறுகளாக பிரிந்து செயறபட வேண்டிய நிலைக்குத் தள்ளபபட்டிருப்பதாகவும் அரசியல் அவதானிகள சுட்டிக்காட்டுகின்றார்கள்.

இதேவேளை, கருணாவின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களுக்கு செல்வதறகு கருணா தரப்புக்குழுவினர் கட்டுப்பாடு விதித்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(து-60,10)

# தேர்தல் கண்காணிப்பாளர்களுடன் ஈ.பி.டி.பியினர் . யாழில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

ஐரோப்பிய யூனியனின் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் குழுவினர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரைச் சந்தித்து பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி இடம் பெற்ற இச் சந்திப்பில் ஐரோப்பிய யூனியன் சார்பாக யாழ். மாவட்ட தேர்தல் வன்முறைகளைக் கணிகாணிக்க என நியமிக்கப்பட்டுள்ள மொனிக்கா கிளம்பொனி மற்றும் றொபேட் வெனர் ஆகியோர் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர்களான எஸ். சிவகாசன் மகேஸ்வரி வேலாயுதம் மற்றும் பாலநடராஜ ஐயர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

இதன் போது,யாழ். குடாநாட்டில் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்க ஐரோப்பிய ஒன்றியம் முன்வந்துள்ளமைக்கு நன்றி தெரிவித்த டக்ளஸ் ஐரோப்பிய நாடுகளில் நிலவுவது போன்ற ஓர் மேம்பட்ட ஜனநாயகச் சூழல்இங்கு நிலவவேண்டும் எனவும் யாழ். குடாநாட்டில் நிலை கொண்டுள்ள ஆயுததாரிகளின் செயற்பாடுகள் மக்களின் இயல்பு வாழ்வுக்கு அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(கு-4)

# ஐ.ம.சு.மு.வின் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழர்களை ஏமாற்றி விட்டது

## குமரகுருபரன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழ் மக்களுககு ஏமாற்றம் தரும் வகையில் அமைந்துள்ளது என அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸின் சிரேஷ்ட உபதலைவரான எம்.குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியினால் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தெளிவான தீர்வுத்திட்டம் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதாக தேர்தல் பிரசாரஙகளில் இக் கூட்டணி தெரிவித்து வருகின்ற போதிலும் இவ் விடயம் பற்றித் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எதுவும் குறிப்பிடவில்லை.

இலங்கை மக்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலின் மூலம் சிங்கள தேசத்தின் தலைவர் யாரென்பதைத் தெளிவுறுத்துவார்கள்.

(து-61,8)

# தேர்தல் ஏற்பாடு குறித்த மாநாடு இன்று

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்பரல் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது பற்றி ஆராயும் மாநாடு இன்று வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா தலைமையில் நடைபெறவுள்ள இம் மாநாட்டில் சகல மாவட்டங்களையும் சேர்ந்த தெரிவத்தாட்சி அலுவலர்கள் உதவித் தேர்தல் ஆணையாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

(து-60,10)

# சமகால அரசியல் நிலைபற்றி முல்லை மக்களுக்கு விளக்கம்

(வவுனியா)

சமகால அரசியல் நிலைப்பாடுகள் குறித்து விடுதலைப்புலிகளின் முல்லைத்தீவு கடற்புலிகளினால் அப்பகுதி மக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய தேர்தல் தொடர்பாகவும் புலிகளின் அமைப்புக்குள் ஏற்பட்டுள்ள நிலைப்பாடுகள் தொடர்பாகவும் முல்லைத்தீவு பிரதேசத்தில் வாழ்ந்துவரும் மக்களுக்கு கடற்புலிகளின் அரசியல் துறையினரும், விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களும் இந்த பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நீண்ட இடைவெளிக்குப் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் இம்முறை வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதால் இவ்வாறான பிரசாரம் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது.(தி-8)

# 'மீண்டும் துளிர்க்கும் வசந்தம்' இன்று யாழில் அறிமுகம்



போராளிக் கவிஞர் அம்புலியின் கைவண்ணத்தில் உருவான "மீண்டும் துளிர்க்கும் வசந்தம்" என்னும் நூல் அறிமுக விழா இன்று மாலை 3.30 மணியளவில் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நூலுக்கு தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் வழங்கியுள்ள ஆசி உரையில் காலம் காலமாக எம் மக்கள் அனுபவிக்கின்ற துன்ப துயரங்களையும் மரணத்துள் வாழ்கின்ற எம் மக்களின் கதைகளையும் இந் நூல் காலப்பதிவாக்கியுள்ளது.

பெண்புலிகளது போராட்ட வாழ்க்கையையும் இதனால் எம் மண்ணில் நிகழும் சமூகமாற்றங்களையும் இந் நூல் வெளிப்படுத்துகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

(து-4)


பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - யாழ்மாவட்டம் - 2004

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



தமிழ்த் தேசிய இனத்தின் தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை (சுய நிர்ணயவுரிமை) ஆகிய மூலாதாரக் கோரிக்கைகளை ஏற்று அவற்றின் அடிப்படையில் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணுவோம்.



திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் பொதுச் செயலாளரும்.

இல: 5

திரு. சீ. வீ. கே. சிவஞானம்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் உபதலைவர்களில் ஒருவர்.

இல: 9

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி X

# வடக்கின் மாபெரும் போர்

# இன்றுமுதல் மூன்று தினங்கள்

வடக்கிலே பெரும்போர் என அழைக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரி அணிக்கும் யாழ்.பரியோவான் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெறும் பெரும் துடுப்பாட்டப் போட்டியானது இன்றும் நாளையும் நாளை மறுதினமும் யாழ். மத்திய கல்லூரி மைதானததில் நடைபெறவுள்ளது. இம்முறை நடைபெறும் போட்டி 100வது போட்டியாக அமைகின்றமை குறிப்பிடத் தக்கது.

1904ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெற்றுவரும் இப் போட்டியானது மிகவும் எதிர்பார்ப்புடன் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது. இப் பெரும் துடுப்பாட்டமானது முன்னைய காலங்களில் இரண்டு நாட்கள் கொண்ட போட்டியாக நடைபெறறு வந்தது. ஆனால் இம்முறை 3நாட்கள் கொண்ட போட்டியாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐம்பது ஓவர்கொண்ட பொன் அணிகளின் போர் இன்று

புனித பத்திரிசியார் கல்லூரி அணிக்கும், யாழ்பபாணக் கல்லூரி அணிக்கும் இடையிலான 16வது ராஜன் கதிர்காமர் கேடயத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட 50ஓவர்கள் கொண்ட வடக்கின பொன் அணிகள் போா இன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் மைதானத்தில் நடைபெறவுளளது. இரு அணிகளுக்கும் இடையிலான இப் போட்டி காலை 9.00மணிக்கு ஆரம்பமாகும்.

ஜீ.செல்வின் லொயிற் தலைமையில் பத்திரிசியார் கல்லூரி அணியும், எஸ்.யே.நிறோசன் தலைமையில் யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் இப் போட்டியில் களம் இறங்குகின்றன.

இப் போட்டியில் பங்குபற்றும் வீரர்களின் விபரம் வருமாறு,

**பத்திரிசியார் கல்லூரி அணி**

ஜீ. செலவின் லொயிற் (அணித் தலைவர்), ஆர்.வினோதன் (அணி உபதலைவர்), எஸ்.போல்டன் ஹெரன்டன், ஆர்.நிசாந்தன், ஏ.ல்.சுஜீவன், ஏ.ஜே.வின்சன், ஜே.சுரேன், ரி.சுஜந்தன், வி.யே.லூட்சன், எஸ்.ஜெனன்ராஜ், யே.யதீஸ்வரன், வி.விதுபாலா, ஏ.யேந்திரன், வி.பத்மமுரளி, ரி.டியூரன்.

**யாழ்ப்பாணக் கல்லூரி அணி**

எஸ்.யே.நிரோசன் (அணித்தலைவர்), என்.எஸ்.செந்தூரன் (அணி உபதலைவர்), எஸ்.எம்.திலீபன், எம்.றமணன், வை.துஜன், கே.உதயகுமார், வி.நிருபரன், எஸ்.தானரன், ஏ.அகிலநாதன், யே.ஜேயச்சந்திரன், கே.பெரியதம்பி, ஏ.அஜந்தன், ஆர்யாலு, எம்.ஜேன்குமார், யே.தனுசன், யே.செந்தூரன்.

இரு அணிகளும் இதுவரை 15 போட்டிகளில் பங்குபற்றியுள்ளன. இதில் 10போட்டிகளில் பத்திரிசியார் கல்லூரி அணியும் 5 போட்டிகளில் யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் வெற்றிபெற்றுள்ளன.

**ராஜன் கதிர்காமர் வெற்றிக் கேடயத்திற்கான வடக்கின் பொன் அணிகள் போர்**

*** அதிகூடுதலான ஓட்டம**

1) யாழ்ப்பாணக்கல்லூரி அணி-8விக்கெற் இழப்பிற்கு 192ஓட்டங்கள். (1992)

2) பத்திரிசியார் கல்லூரி அணி-7 விக்கெற் இழப்பிற்கு 320ஓட்டங்கள் (2002)


*** சிறந்த இணைப்பாட்டம்**

1) யாழ்ப்பாணக்கல்லூரி அணி சார்பாக சஞ்சீவன், பீற்றா ஆகியோர் 3வது விக்கெற் இணையாக 114ஓட்டங்கள் (1993)

2) பத்திரிசியார் கல்லூரி அணி-5 வது விக்கெற் இணையாக செல்வின் லொயிற், வினோதன் ஆகியோரால் பெறப்பட்ட 139ஓட்டங்கள் (2002)

இந்த இரு அணிகளுக்கு இடையிலான போட்டியானது 3வ[illegible] மத்தியஸ்தம் கொண்ட மாபெரும் துடுப்பாட்டமாக யாழ்ப்பாணக்கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9.00மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இம் மாபெரும் துடுப்பாட்ட நிகழ்வினைத் தொலைக்காட்சி மூலம் யாழ்.மக்கள் பார்வையிடலாம்.


## யாழ். மத்திய கல்லூரி



**இருப்பவர்கள் இடமிருந்து வலமாக-வி.கே.சண்முகலிங்கம் (அணி பயிற்றுநர்), இ.எவ்.ஆர்.ஜெயக்குமார் (பொறுப்பாசிரியர்), ஆர்.மதுசன் (அணித்தலைவர்), கே.இராசதுரை (அதிபர்), கே.றொகான் (உதவி அணித்தலைவர்), வி.றஜீவ்குமார், வி.எஸ்.மகேந்திரன் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்), எஸ்.சுரேஸ் மோகன் (உதவி அணிப் பயிற்றுநர்)**

**நிற்போர் இடமிருந்து வலமாக-என்.துஷியந்தன், வி.ஜோன் பிறேயினர், ஆர்.சியாம்ராஜ், எஸ்.சுரேஸ்ராஜா, எம்.யசோதரன், எவ்.எக்ஸ்.மயூரன், எஸ்.தினேஸ், எஸ்.சத்தியன், வீ.கீதாமிர்தன், கே.கவிஸ்ரன், வி.கபில் தேவ், ஏ.யசிந்தன்.**

## யாழ்.பரியோவான் கல்லூரி



**இருப்பவர்கள் இடமிருந்து வலமாக-வி.எஸ்.வி.துஸிதரன் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்), ரி.மதன்ராஜ், ரி.ஸி.அன்றூ (அணித் தலைவர்), எஸ்.தனபாலன் (அதிபர்), ஸி.எம்.டினேஸ் (உதவி அணித் தலைவர்), எஸ்.கிருஸ்ணகுமார், கே.எஸ்.முகுந்தன் (அணிப் பயிற்றுநர்)**

**நிற்பவர்கள் இடமிருந்து வலமாக-பி.ஷகிந்தன், ஏ.மயூரதன், ரி.நரூபன், ஏ.அன்புஜன், எஸ்.சுதன், எம்.மயூரன், வை.தனுஜன், பி.கஜரூபன், பி.சஞ்சீவன், என்.நவகீதன், ஏ.கிறஷ்சன், ரி.கிருஷாந்.**

### யார் இவர்கள்?

**மத்திய கல்லூரி**

1) **ஆர்.மதுஷன**: அணியின் தலைவர். 6 வருடமாக விளையாடிவரும் ஒரு விருதுபெற்ற வீரன். வலதுள்கையால் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடும் நடுவரிசைத் துடுப்பாட்ட வீரன். வலதுகை சுழற்பந்து வீச்சாளர். ஒரு சிறந்த களத்தடுப்பாளர். திறமையுள்ள ஒரு சகல துறை ஆட்டக்காரர்.

2) **கே.றொகான** 5 வருடமாக அணிக்காக விளையாடிவரும் விருது பெற்ற வீரர். உபதலைவர். நளினமாக வலக்கையால் துடுப்பெடுத்தாடும் ஆரம்பத் துடுப்பாட்டவீரர். நடுத்தர வேகப்பந்துவீச்சாளா. 19 வயதிற்குட்பட்ட வட-கிழக்கு மாவட்ட அணிக்காகவும், யாழ்மாவட்ட அணிக்காகவும், 19வயதிற்குட்பட்ட மாவட்ட அணிக்காகவும் விளையாடியவர். மிகச் சிறப்பான முறையில் களத்தின் எப்பாகத்திலும் பந்தைத் தடுப்பதில் வல்லவர். அணிக்காக சதம் அடித்தவர்களில் ஒருவர்.

3) **வீ.றஜீவ் குமார்**:கடந்த வருடம் அணித்தலைவராக அணியை வழிநடத்தியவர். அணிக்காக 6 வருடம் விளையாடிவரும ஒரு விருது பெற்றவர். இடதுகை ஆரம்ப பந்துவீச்சாளர். சாதுரியத்துடன் பாதச் சுழற்சிமுறையில் சுழற்பந்து வீசுபவர். இடதுகை நடுவரிசைத் துடுப்பாட்ட வீரர். சதம் அடித்தவாகளில் ஒருவர். எவ்விடத்திலும் நின்று பந்தைத் தடுப்பதில் வல்லவர். யாழ்.மாவட்ட அணிக்காகவும், 19வயதிற்குட்பட்ட மாவட்ட அணிக்காகவும் 2003ல் விளையாடியவர்.

4) **ஏ.யஸிந்தன**:3 வருடமாக விளையாடுபவர். ஓர் நம்பிக்கையுள்ள நளினமான வலதுகை பாதச சுழற்சிக்குரிய சுழற்பந்து வீச்சாளர். அணிக்காக சதம் அடித்தவர்களுள் ஒருவர். 19 வயதிற்குட்பட்ட மாவட்ட அணிக்காகவும் விளையாடியவர். களத்தின் எப்பாகத்திலும் நின்று களத்தடுப்பு செய்வதில் வல்லவர்.

5) **கே.கவிஸ்டன**: 2 வருட்கால மாக அணிக்காக விளையாடுபவர். நளினமான இடதுகை துடுப்பாட்ட வீரர். வலக்கை மத்திய வேக சுழற்பந்து வீச்சாளர். எந்த இடத்திலும் நின்று களத்தடுப்புச் செய்வதில் வல்லவர்.

6) **வீ.கபில்தேவ**: 3வருட நமபிக்கையான வலக்கைத் துடுப்பாட்ட வீரர். 4ம் இலக்க துடுப்பாட்ட வீரர். வலக்கை மத்திம வேகப் பந்து வீச்சாளர். எந்தவிடத்திலும் நின்று களக்கடுப்பச் செய்வகில் வல்லவர்.

7) **எஸ்.தினேஷ**: ஆரம்பத் துடுப்பாட்ட வீரர். எந்த இடத்திலும் நின்று களத்தடுப்புச் செய்வதில் வல்லவர்.

8) **சியாம்ராஜ**:அணிக்குப் புதியவர். வலதுகை நடுவரிசைத் துடுப்பாட்ட வீரர். வலதுகை வேகப் பந்து வீச்சாளர். சிறந்த களத் தடுப்பாளர்.

9) **எம்.யசோதரன**:2 வருடகால மாக விளையாடுபவர். ரஜீவ்குமாருடன் இணைந்து 2வருடகாலமாக விளையாடுபவர். ஆரம்பப் பந்து வீச்சாளராகப் பந்தைப் பரிமாற்றி செயற்படுபவர். இடதுகை உள்ளக வெளியக சுழற்சியை இருபுறமும் மேற்கொள்ளும் பநதுவீச்சாளர். வலதுகை கடைநிலை வரிசைத் துடுப்பாட்ட வீரர். எல்லைக்கோட்டிற்கு அருகாமையில் நின்று பந்தைத் தடுக்கக்கூடியவர்.

10) **எஸ்.சுரேஸ்ராஜா**: 2வருட காலமாக அணிக்காக விளையாடும் வீரர். வலதுகை மத்தியவரிசைக் குரிய துடுப்பாட்ட வீரர். மிக வேகமாகவும் துரித கதியிலும் ஓட்டங்களைக் குவிகக்கூடியவர். வெளியக சுழற்சியை மேற்கொள்ளும் வலதுகை சுழற்பந்துவீச்சாளர். களத்தில் எம்முனைகளிலும் நின்று பந்தைத் தடுப்பதில் வல்லவா. சிறப்பான சகலதுறை ஆட்டக்காரர். விக்கெற் காப்பாளராகவும் இருந்தவர்.

11) **வி.கீதாமிர்தன**:அணிக்குப புதியவர். அணியின் விக்கெற் காப்பாளர். எப்போதும் விக்கெற்றுக்களுக்குப் பின்னால் எச்சரிக்கையுடன் இருப்பவர்.

12) **எவ்.எக்ஸ்.மயரன**:அணிககுப் புதியவர். வலதுகை மத்திய வேகப்பந்து வீச்சாளர். வலதுகை துடுப்பாட்டவீரர். களத்தில் மிக உட்புறமாக நின்று களத்தடுப்புச் செய்வதில் வல்லவர்.

13) **என்.துஷ்யந்தன**:இரண்டாவது வருடமாக அணிக்காக விளையாடுபவர். மிகவும் நேர்த்தியான வலதுகைத் துடுப்பாட்டவீரர். வலதுகை வெளியக சிறப்பு சுழற்பந்து வீச்சாளர்.

14) **எஸ்.சத்தியன**:அணிக்குப புதியவா. வலக்கை மத்திம வேகப் பந்து வீச்சாளர். நடுத்தர வரிசைத் துடுப்பாட்ட வீரர். களத்தில் எப்பாகத்திலிருந்தும் களத்தடுப்பு செய்வதில் சிறந்தவர்.

15) **வீ.யோண் பிறேயினா**: அணிக்குப் புதியவர். வலதுகை வெளியக சுழற்சியை மேற்கொள்ளும் சுழற்பந்துவீச்சாளர். மத்திய வரிசை/நடுவரிசைத் துடுப்பாட்ட வீரரான இவ் சிறந்த களத்தடுப்பாளரும்கூட.

### யார் இவர்கள்?

**பரியோவான் கல்லூரி**

1) **ரீ.ஸி.அன்றூ**:அணியின் தலைவர், 4வருடமாக விளையாடும் விருது பெற்றவா. வலதுகை நடுவரிசைத் துடுப்பாட்டக்கர்.. வலதுகை நடுத்தர வேகப்பந்துவீச்சாளா. பந்தை மிக வேகமாக அடிப்பவர். பந்தானது திடீரெனத் திரும்புமாறு இரு வழிகளிலும் வீசக்கூடியவர். நல்ல களத் தடுப்பாளர். 2003ல 19வயதுக்குட்பட்ட யாழ்.பாடசாலை அணியில் அங்கம் வகித்தவர். கடந்த வருடம் ஆரம்ப மட்டுப்படுததபபட்ட ஓவர் போட்டியில் ஆட்ட நாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். ஒரு சகலதுறை ஆட்டக்காரர்.

2) **ஸி.எம்.டினேஸ**:பிரதித் தலைவர். 3 வருடகாலமாக விளையாடும் ஒரு விருது பெற்றவர். நம்பிக்கையான ஆனால் ஆக்ரோஷமான வலக்கை நடுவரிசை ஆட்டக்காரர். அணியானது மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கும் போது அணியைக் கைதூக்கி விடுபவா. ஸ்கந்தவரோதயாவுக்கு எதிராக ஆட்டமிழக்காமல் சதம் அடித்தவர். இந்தப் பருவகாலத்தில் கூடிய ஓட்டங்கள பெற்றவர். விக்கெற்றுகளுக்குப் பின்னால் கவனத்துடன் இயங்கும் விக்கெற் காப்பாளர். இவரும் 19வயதுக்குட்பட்ட யாழ்.பாடசாலைகள் அணியில் இடம்பெற்றிருந்தார்.

3) **எஸ்.கிருஷ்ணகுமா**:4வருடமாக அணியில் விளையாடுபவர் ஆக்ரோஷமாகவும், அதிரடியாகவும் விளையாடிப் பந்தை வேகமாக அடிக்கக்கூடியவர். இந்தப் பருவகாலத்தில் வடக்கில் முதன் முறையாக சதம் அடித்தவர். வலக்கை சுழற்பந்து வீச்சாளர். பாதச்சுழற்சி முறையில் சுழற்பந்து வீசி எதிரணியைத் திக்குமுக்காடச் செய்பவரும்கூட. "ஸ்லிப்" புள்ளியில் பந்தைத் தடுப்பவர். ஒரு சகலதுறை ஆட்டக்காரர்.

4) **ரீ.மதன் ராஜ்**: 3 வருடகால மாக அணியில் விளையாடுபவர். விக்கெற்றைச் சுற்றி நாலாபுறமும் வெவ்வேறு விதமாக ஆடக்கூடியவர். மயூரனுடன் புதிய பந்தைப் பரிமாற்றம் செய்து விளையாடுவதுடன், இடக்கையால் பந்தை வேகமாகத் திடீரென்று திரும்பும் வண்ணம் இரு திசைகளிலும் வீசக்கூடியவர். களத்தின் எப்பாகத்திலும் நின்று களத்தடுப்புச் செயயக்கூடியவர். ஒரு சகலதுறை ஆட்டக்காரர்.

5) **ஏ.அனபுஜன**: 3 வருடகால அனுபவமுள்ளவர். பந்தைத் தனக்கே உரிய பாணியில் மிக நளினமாக ஆனால் ஆக்ரோஷமாக விளையாடக்கூடிய ஆரமபத்துடுப்பாட்ட வீரர். இந்தப பருவகாலத்தில் கூடிய ஓட்டங்கள் எடுத்தவர். "கலி" புள்ளியில் நின்று நன்றாகக் களத்தடுப்புச் செய்பவர். தேவை ஏற்படின் வலக்கை சுழற்பந்து வீச்சாளராகவும் செயற்படக்கூடியவர்.

6) **எம்.மயூரன**: 2 வருட அனுபவம் உள்ளவர். இந்தப் பருவகாலத்தில் ஓரளவு விக்கெற்றுக்களை வீழ்த்திய வலக்கை ஆரம்ப வேகப் பந்து வீச்சாளர். முன்னேற்றகரமான தடைநிலை வரிசை வலதுகை ஆட்டக்காரர். பலமான கரங்களால் மிகச் சிறந்தமுறையில் பந்தைத் தடுக்கக்கூடியவர்.

7) **பி.ஷகிந்தன**: 2 வருட கால அனுபவம் உள்ளவர். வலது கை நடுவரிசை ஆட்டக்காரர். தேவை ஏற்படின் விக்கெற்றுக்களுக்குப் பின்னால் நின்று பந்தைத் தடுக்கக் கூடியவர்.

8) **எஸ்.சுதன**: 2 வருடகால அனுபவமுள்ளவர். பந்தானது துஸரியமாகத் திரும்பும் வகையில் வலக்கை சுழற்பந்து வீச்சைச செய்யக்கூடியவர். நம்பகமான வலக்கை, ஆனால் கடநிலை வரிசை ஆட்டக்காரர். மிகச் சிறப்பான முறையில் களத்தடுப்புச் செய்யக்கூடியவர்.

9) **வை.தனுஜன**:அணிக்குப் புதியவர். வலதுகை துடுப்பாட்ட வீரர். வலதுகை நடுத்தர வேகப் பந்து வீச்சாளர். களத்தில் எத்திசையிலும் நின்று பந்தைத் தடுப்பதில் வல்லவர்.

10) **என்.நவகீதன**:அணிக்குப புதியவர். நளினமான, ஆனால் நம்பிக்கையான அணிக்காக அதிக ஓட்டங்களையும் பாராட்டையும் பெறும் வண்ணம் துடுப்பெடுத்தாடும் ஒரு இடதுகை நடுவரிசைத் துடுப்பாட்ட வீரர். இந்தப் பருவகாலத்தில் விககெற்றுக்களை எடுத்து ஒரு மெதுமையான வேகததில் பந்தை வீசும் இடதுகைப் பந்துவீச்சாளர். சிறந்த களத்தடுப்பாளர். இவரும் ஒரு சகல துறை ஆட்டக்காரர்.

11) **என்.நிருபரன**:அணிக்குப் புதியவா. இன்னும் ஒரு நல்ல நிலைக்கு வரா விட்டாலும், நளினமாக விளையாடக்கூடிய, விக்கெற்றைச் சுற்றி எல்லாப்புறமும் பந்தை அடிக்கக் கூடிய வலக்கை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர். நடுத்தர வேக வலக்கைப் பந்துவீச்சாளர். களத்தின் எப்பாகத்திலும் நின்று பந்தைத் தடுக்கக்கூடியவர்.

12) **ஏ.சஞ்சீவன**: 2 வருடமாக விளையாடும் வலக்கை நடுவரிசை ஆட்டக்காரர். வலதுகை வேகப் பநது வீச்சாளர். மிகச் சிறந்த களத் தடுப்பாளர்.

13) **ஏ.மயூரதன**:அணிக்குப் புதியவர். ஒரு நம்பிக்கையான வலதுகை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர். வெளிச் சுழற்சி முறையில் வலதுகையால் பந்தை வீசக்கூடியவர். விக்கெற்றுக்கு அண்மித்த பகுதிகளில் நின்று களத்தடுப்பு செய்யக்கூடியவர்.

14) **ஏ.கிறிஷ்சன**: அணிக்குப் புதியவர். வலக்கை அதிரடித் துடுப்பாட்ட வீரர். வலக்கை நடுத்தர வேகப்பந்து வீச்சாளர். எப்பாகத்திலும் நின்று பந்தைத் தடுப்பதில் வல்லவர்.

15) **பி.கஜரூபன**:அணிக்குப் புதியவர் வலதுகை துடுப்பாட்ட வீரா மெதுவான இடதுகை சுழற்பந்து வீச்சுக்களை இரு புறமும் செய்யக்கூடியவர் எப்பாகத்திலும் நி[illegible] பந்தைத் தடுப்பதில் வல்லவர்.

16) **ரீ.கிருஷாந**:அணிக்குப் புதியவர். அத்துடன் அணியில் மிகவும் இளையவர். வலக்கைத் துடுப்பாட்ட வீரர். வலக்கை நடுதத்ர வேகப்பந்து வீச்சாளர். ஒரு சிறந்த களத்தடுப்பாளர்

# பசியின்மை நோயும் தீராத பசி நோயும்

உளவியல் காரணங்களால் பசியின்மை வற்றல் தொற்றலான நிலையை அடையும் வரை ஏற்படுவதை ஆங்கிலத்தில் **'Anoresia Neivosa'** என்கிறார்கள். இந்நோயுற்றவர்களுக்கு எங்கே உடல் பருத்து மிகவும் குண்டாகிவிடுவோமோ என்ற இயல்புக்கு மாறான பயம் நாளுக்கு நாள் வளரும், உடலும் பார்க்க அழகின்றி மிகவும் உருக்குலைந்து காணப்படும். அவரது மனத்திற்கு அவர் மிகவும் குண்டாக இருப்பதாகத் தோற்றம்; உண்மையில் அப்படி இராது. எனவே அவர் ஏற்கனவே எலும்பும் தோலுமாக ஆகிவிட்ட நிலையிலும் மேலும் உடல் எடைக் குறைப்பில் ஈடுபடுவார்.

ஆரம்ப நிலையில் உண்மையான பசியின்மை ஏற்படுவதில்லை. பசி அதிகமாகக் கிள்ளினாலும் அந் நபர் உடல் எடையைக் குறைக்கும் நோக்கத்தோடு பட்டினி கிடப்பார். சில வித்தியாசமான கேசுகளில், இந்நோயுற்றவர் அளவுக்கு மீறிய உடல் எடையிழப்பின் பக்க விளைவுகளின் காரணமாக இறக்கவும் நேரிடுவதுண்டு.

### பசியின்மை நோயால் துன்புறுவோர் யார்;

இந் நோயால் துன்புறுவோர் பெரும்பாலும் 13-19 வயதுக்குட்பட்ட பதின்மர் வயதுப் பெண்கள் தான் என்றாலும் வயதுவந்த பெண்களிலும் பலர் இதனால் துன்புறுவதுண்டு. பையன்களும் ஆண்களும் அநேகமாக இதனால் பாதிக்கப்படுவதில்லை.

இந்நோயாளி புத்திசாலியாகவும் கீழ்ப்படிதலும் எல்லோருடனும் இணக்கமாகப் பழகும் பண்பு உள்ளவராகவும் காணப்படுவார். அப்படியிருந்தாலும் சமூகத்தோடு ஒன்றி வாழ்வதில் தயக்கம் காட்டுவார்; அவரது பாலியல் மனோபாவமும் உடல் வளர்ச்சியும் பெருமளவு பின்தங்கிய நிலையில் இருக்கும். அநேகமாக எல்லா விஷயங்களிலும் கை சுத்தமானவராகவும், எதிலும் முழுமையைக் கடைப்பிடிப்பவராகவும், பெருஞ் சாதனையாளராகவும் இருப்பார். போட்டி மனப்பான்மை மிகுதியாக இருக்கும்; வகுப்பில் தன் உடல் பயிலுவோரைவிட அல்லது உடனிருப்போரைவிட மிக அழகிய மெல்லிய உடல்வாகைப் பெற மிகவும் முயல்வார். அவரது அதிகப்படியான உடல் எடை இழப்பினால், வற்றல் தொற்றலான நிலையை அடையும் வரை எட்டுவதோடு, உடல்வாகு மிகவும் உருக்குலைந்து போய்விடும்.

இந்நோயுற்றோர் அநேகமாக நடுத்தட்டு மக்கள் குழுவிலிந்து வருவார், இவரது குடும்ப நிலை பொருளாதாரத்தில் ஒரு திருப்தியான எல்லையை அடைந்திருக்கும்; என்றாலும் உண்மையில் குடும்ப உறுப்பினர்களிடையே போராட்டம் ஆழமாக வேர்விட்டிருக்கும். வீட்டில் தகப்பனார் அநேகமாக ஒரு நிழல் உருவாகத் தென்படுவார்; தாயாரோ, எல்லாவற்றையும் கட்டியாளும் சாம்ராஜ்ய சக்கரவர்த்தினியாகக் காட்சியளிப்பார். குடும்ப உறுப்பினர்களில் ஓரிருவர் அதிக உடல் எடைபோட்ட குண்டர்களாக இருப்ப துண்டு.

### பசியின்மை நோயுற்றோரின் உணவுப் பழக்கங்கள்

பசியின்மை நோயுற்றவர் உருளைக்கிழங்குகள், ரொட்டி மற்றும் இதர தானிய உணவு வகைகளை உண்ண மறுப்பார், மற்ற உணவுகளை வெறுமனே கொறிப்பார். எப்போதும் தனிமையில் சாப்பிடவே விரும்புவார் அல்லது உணவை ஒளித்துவைத்துக் கொள்வார்; அவர் உணவை ஏற்கெனவே உண்டுவிட்டதாக எண்ணும்படி பெற்றோருக்குப் போக்குக் காட்டுவார். காப்பி அருந்தும் பழக்கம் உள்ளவர், அது பசியுணர்வைக் குறைக்கக்கூடியது என்றும், ஆற்றலை உடலுக்கு வழங்கக்கூடியது என்றும் எண்ணிக்கொண்டு காப்பியை அளவுக்கு மீறி அதிக அளவில் குடிப்பார்.

### பசியின்மை நோயின் அறி குறிகள்

பசியின்மை நோயுடையவர் உடல் எடைக் குறைப்பு செயல்பாடுகளில் இயல்புக்கு மாறான விதத்தில் ஈடுபாடு உள்ளவராகக் காணப்படுவார். உடல் (மெலிவு) வற்றி எலும்பும் தோலுமாக இருப்பதுடன், இரத்த சோகை, இரத்த அழுத்தக் குறைவு, உறங்குவதில் தொல்லைகள், மெலிந்த - உலர்ந்த - குச்சுக் குச்சான தலை முடிகளும் காணப்படுவது பசியின்மை நோயின் முக்கியமான பண்புகள், மாதவிலக்கு நின்றுவிடும்; அநேகமாக போதுமான உடல் எடை போட்ட ஓராண்டுக்குப் பின்னர்தான் மாதவிலக்குத் தோன்றும், இப்படிப்பட்ட நிலை நிரந்தரமான மலட்டுத் தன்மைக்கு வழிவகுப்பது உண்டு.

பசியின்மை நோயுற்றோரின் மேல்தோல் வறட்சியுடனும் இலேசான மஞ்சள் நிறத்துடனும் காணப்படும். கைகளிலும் முதுகு, வயிறு மற்றும் மேற்கால் பகுதிகளிலும் சில சமயம் மெல்லிய ஊரோமங்கள் மூடி இருக்கும். இந்நோயுற்ற பெண்ணின் உடல் எடை 30 கிலோவிற்கும் கீழ் சென்றுவிடும் போது நிரந்தரமான மூளைச் சேதம் ஏறபடுவதோடு, நடைப்பிணம் மாதிரி எதற்கும் தகுதியற்றவராக மாறி இறுதியில் இறக்கவும் நேரிடும்.

### சிகிச்சை

மருத்துவமனையில் சேர்த்து அன்பான மருத்துவக் குழுவினராலும் உளவியல் மருத்துவ நிபுணராலும் ஓர் ஊட்ட உணவு நிபுணராலும் கனிவான சிகிச்சை அளிக்கப்பட்டால் நலம்பெற்று எழக்கூடும். மருத்துவ மனையில் சேர்ப்பதால் நோயுற்றவர் விரும்பிய - குடும்பத்தினரை குடும்பச் சூழலைவிட்டுப் பிரிந்திருக்கவேண்டும் என்ற எண்ணத்திற்கேற்ப சூழல் அமையப் பெற முடிகிறது. உண்மையில் தேவையான உடல் வடிவத்தை அடையப் போதுமான உதவி அங்கே கிட்டுகிறது. குடும்பத்தில் மற்றவர்களுக்கும், இதன் பின்னணிக் காரணம் இன்னது என்று அறிந்து அதனால் உண்டான சிக்கல்களை விடுவிக்க போதிய நேரம் கிடைக்கிறது.

### பசியின்மை நோயினைத் தடுத்தல்

உளவியல் தோற்ற மூலத்துடன் கூடிய உடல் சார்ந்த நலக்கேடாக இது இருந்தபோதிலும், தாய்மார்கள் இப்பசியின்மை நோயினைத் தடுக்க உதவி செய்ய முடியும். சிறுபிள்ளைகள், குறிப்பாகப் பெண்பிள்ளைகள் - போதுமான அளவு சத்துக்கள் அடங்கிய உணவுகளை உண்ணவும், போதிய உடற்பயிற்சிகளிலும் பொழுது போக்குகளிலும் ஈடுபடவும் வேண்டும் என்று கற்பிக்கப்படவேண்டும். இவை யாவும் ஓர் ஆரோக்கியமான மனத்திற்கும் உடலுக்கும் மிக அவசியமானவை என்று அவர்கள் உணரவேண்டும். ஒடிசலான உடல உடல்வாகிற்கு மிக உயர்வான இடமளிப்பதையும் பாராட்டிப் பேசுதலையும் தவிர்க்கவேண்டும். மேலும், உடல் எடையை விரைவாகக் குறைப்பதற்குச் சத்தற்ற உணவுகளைப் பரிந்துரைப்பதையும் தவிர்க்கவேண்டும். தாய்மார்கள் தங்களது பெண்பிள்ளைகளின் உணவுப்பழக்கங்கள் இயல்புக்கு மாறானவையாக அல்லது பெண்பிள்ளைகளின் நடவடிக்கைகள் திடீரென்று அளவுக்கு மீறிய உடல் எடை இழப்பில் கொண்போய் நிறுத்துபவையாக இருந்தால் உடனடியாக குடும்ப மருத்துவரிடம் சென்று கலந்தாலோசிக்கவேண்டும். சிகிச்சை அளிப்பதில் ஏற்படும் காலதாமதம் எத்தனை நீண்டதாகவுள்ளதோ அந்த அளவுக்கு குணமடைதல் சிக்கலானதாகும்.

### தீராத பசிநோய்

இது பசியின்மை நோயுடன் தொடர்புடையது தான். இந்நோயுற்றவர் அநேகமாக சற்று வயதானவராகவும் இவரது உடல் நிலை கிட்டத்தட்ட இயல்பானதாகவும் இருக்கும். இந்நோயுற்றவர் தனிமை உணர்வை எய்தும் போதும், மனமடிவு நிலையை அடைந்த போதும். அடிக்கடி எதையாவது உள்ளே தள்ளிக்கொண்டேயிருப்பார், பின்னர் குற்றவுணர்வு தோன்றினால், உண்டது அனைத்தையும் வாந்திமூலம் வெளியே எடுத்துவிட முற்படுவார். வாந்தி எடுக்கும் செயலை, தன் உடல் எடையைக் கட்டுப்பாடோடு வைத்துக்கொள்வதற்காகப் பயன்படுத்துவார். அமிலச் சுரப்பு மிக்கவாந்தியை அடிக்கடி எடுப்பதன் காரணமாக, அவரது பற்கள் தேசமடையும்; தொண்டையிலும் உணவுக் குழாயிலும் அழற்சி உண்டாகும்.

**எஸ். சிவா**

இன்னொரு வகையினர் வாந்தி எடுப்பதற்குப் பதிலாக பெருமளவில் மலமிளக்கிகளை (சாதாரண டோஸ்களைப்போல் 20-50 மடங்கு அதிக டோஸ்கள்) எடுப்பது உண்டு. உண்ட உணவின் பிடியிலிருந்து விடுபட இப்படியும் ஒருவழி! இந்தப் பழக்கத்தினால் குதப்பகுதியில் இரத்தவொழுக்கு உண்டாகும். வாந்தியெடுப்பதும் மலமிளக்கிகளை உட்கொள்ளுவதும் இரண்டையுமே செய்பவர்களும் உண்டு. இதனால் இவர்கள் விரும்பியதை அடைய முடிகிறது. எனினும் உடல்நலம் நாளடைவில் கெடும என்பதை இவர்கள் நினைத்துப்பார்ப்பதில்லை. □

---

## வாஜ்பாய் சொல்வது ஒன்று நடப்பது வேறொன்று

(புதுடில்லி)

கண்ணியமான முறையில் தேர்தல் பிரசாரம மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுரை கூறியுள்ள வாஜ்பாய், முதலில் தமது கட்சிப் பிரமுகர்களுக்கு அந்த அறிவுரையைக் கூறவேண்டுமென்று காங்கிரஸ் கட்சிகேட்டுக் கொண்டுள்ளது.

புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஆனந்தசர்மா தனிப்பட்ட முறையில் யாரையும் விமர்சிக்கக் கூடாது என்று பிரதமர் கூறியிருந்த போதிலும் துணைப் பிரதமர் அத்வானி, பா.ஜ.க. பொதுச் செயலாளர் பிரமோத் மகாஜன் போன்றோர் தேவையற்ற கருத்துக்களைத தெரிவித்திருப்பதாகக் கூறினார்.

பிரச்சினைகளின் அடிப்படையில் விவாதங்கள் இருக்க வேண்டும் என்ற வாஜ்பாயின் கருத்தைக் காங்கிரஸ் ஏற்றுக் கொள்வதாகவும் அதுபோன்ற விவாதங்களுக்கு கட்சி தயாராக இருப்பதாகவும் ஆனந்த சர்மா கூறினார். (து)

**இந்தியச் செய்திகள்**

## பா.ஜ.க.வின் முதல் வேட்பாளர் பட்டியல்

(புதுடில்லி)

வரும் மக்களவைத் தேர்தலில் பிரதமர் வாஜ்பாய் லக்னோ தொகுதியிலும் துணைப் பிரதமர் அத்வானி காந்திநகர் தொகுதியிலும் மீண்டும் போட்டியிடுகிறார்கள்.

பாரதிய ஜனதாக் கட்சி வெளியிட்ட முதல் வேட்பாளர் பட்டியலில் 136 வேட்பாளர்கள் இடம் பெற்றுள்ளார்கள்.

தமிழகத்தில் பா.ஜ.க.சார்பில் போட்டியிடும் வேட்பாளர் பெயர்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாடு பா.ஜ.க. மாநிலத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் கோயம்புத்தூர் தொகுதியிலும், நீலகிரித் தொகுதியில் மாஸ்டர் மாதனும் நாகர்கோயில் தொகுதியில் மத்திய அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணனும் மீண்டும் போட்டியிடுகிறார்கள். என்.எம். சுகுமாரன் நம்பியார் வடசென்னைத் தொகுதியிலும் டி.பெரியசாமி சிதம்பரம் (தனி) தொகுதியிலும் போட்டியிடுகிறார்கள்.

தர்மபுரித் தொகுதியில் சு.ப.இளங்கோவன் போட்டியிடுகிறார். இவர் கலைக்கப்பட்ட மக்களவையில் இதே தொகுதியில் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினராக இருந்தவர்.

மறைந்த மத்திய அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலத்தின் சகோதரி லலிதா குமாரமங்கலம் புதுவைத் தொகுதியில் போட்டியிடுகிறார்.

இன்று வெளியிடப்பட்ட வேட்பாளர்பட்டியலில் கலைக்கப்பட்ட மக்களவையில் இடம் பெற்றிருந்த 83 வேட்பாளர்களுக்கு எதிர்வரும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. (து)

## தேர்தல் பணிகளில் ஈடுபடும் அதிகாரிக்கான பணிப்புரை

தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்படும் அதிகாரிகளில் 50 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக அனைத்துத்தேர்தல் தலைமை அதிகாரிகளுக்கும் தேர்தல ஆணையம் தகவல் அனுப்பியுள்ளது.

தேர்தலை நடத்துவதில் தேர்தல் அதிகாரிகளின் பங்கு மிகவும் முக்கியமானது என்பதால் தேர்தல் நேர்மையாகவும் நியாயமாகவும் நடைபெற அவர்களை நியமனம் செய்வதில் போதிய கவனம் தேவை என்று தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

ஒரு மக்களவைத் தொகுதியை மட்டுமே கொண்ட மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் இந்த உத்தரவு பொருந்தாது.

தேர்தல் அதிகாரிகளாக நியமிக்கப்படுபவர்கள் அரசியல் பதிவு பெற்ற அதிகாரிகளாகவோ அல்லது அதற்கு அடுத்த நிலையிலுள்ள அதிகாரிகளாகவோ தான் இருக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

அதேசமயம் பெண் அதிகாரிகளை வேறு மாவட்டங்களுக்கு தேர்தல் பணிக்கு அனுப்பக் கூடாது எனறும் தேர்தல் ஆணையத்தின் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

## மக்கள் கூட்டணியில் 25 வேட்பாளர்கள்

(சென்னை)

தமிழ் நாட்டில் வரும் மக்களவைத் தேர்தலில் மக்கள் கூட்டணி சார்பில் 25 வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள் என்று கூட்டணியில் இடம் பெற்றுள்ள புதிய தமிழகம் கட்சித்தலைவர் கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக ஒன்பது வேட்பாளர்களின் பெயர்கள் அறிவிக்கப்படுவதாகச் சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தென்காசி (தனி) தொகுதியில் கிருஷ்ணசாமி, சிதம்பரம் (தனி) தொகுதியர் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் திருமாவளவன் இராமநாதபுரம் தொகுதியில் மக்கள் தமிழ் தேசம் கட்சித் தலைவர்கள் கண்ணப்பம் ஆகியோர் இந்தப்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

(கு)

# சங்கானை பிரதேசமட்ட விளையாட்டு விழா

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெற்றுவரும் வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவின் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த தடகளப் போட்டி நிகழ்வுகள் நாளையும், நாளை மறுதினமும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி மைதானததில் நடைபெறவுள்ளது.

சங்கானை பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டியின் இறுதிநாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் மாலை 2.30மணிக்கு இதே கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் கலந்துகொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி க.றொகான் ராஜசிங்கம், வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் வ.றோயல் விமலேந்திரன், மக்கள் வங்கி சங்கானைக் கிளையின் முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளை ஆகியோர் கலந்துகொள்ளுப் அதேவேளை, வலி. மேற்கு கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அன்பு, சங்கானை ப.நோ.கூ.சங்கத் தலைவர் ப.சிவசுப்பிரமணியம், சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் க.ராஜரட்ணம் மற்றும் சங்கானை பிரதேச வர்த்தகச் சங்கத்தலைவர் அ.ஸ்ரீதரன் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அன்று மாலை தடகளப்போட்டி இறுதி நிகழ்வுகளும், உதைபந்தாட்ட இறுதி ஆட்டமும் நடைபெறவுள்ளன. இப் போட்டியில் சில்வர்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து விக்ரோறியன் விளையாட்டுககழகத்தினர் விளையாடவுள்ளனர். (து-68)

# வலிகாமம் வலயக் கரபந்தாட்ட சுற்றுப்போட்டி முடிவுகள்

(அளவெட்டி)

வலிகாமம் வலய மட்ட கரபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு,

**15 வயதின்கீழ் (ஆண்கள்)**

1ம் இடம்:-அருணோதயக்கல்லூரி
2ம் இடம்:-சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
3ம இடம்-இணுவில் மத்திய கல்லூரி.

**17 வயதின்கீழ் (ஆண்கள்)**

1ம் இடம்:-இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்.
2ம் இடம்:-ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்
3ம் இடம்:-சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

**19 வயதின் கீழ் (ஆண்கள்)**

1ம் இடம்:-ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம்
2ம் இடம்:-தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி
3ம் இடம்:-இணுவில் மத்திய கல்லூரி.

(தி-83)

# ஒலிம்பிக் பதக்கம் இந்தியாவுக்குத் தேவை

மாட்ரிட்டில் கடந்த சனிக்கிழமை முடிவுற்ற ஒலிம்பிக் தகுதி ஹொக்கிப் போட்டியில் இந்தியா 4வது இடத்தையே பிடிக்க முடிந்துள்ளது. 8 முறை ஒலிம்பிக்கிலும் ஒருமுறை உலகச் சம்பியன் பட்டங்களை வென்ற பெருமைகளைக் கொண்ட இந்திய அணிக்கும் மாட்ரிட் போட்டியின் உச்ச இலக்கு 2004 ஏதென்ஸ் ஒலிம்பிக்போட்டிக்கான தகுதியே என்றாலும், லீக் ஆட்டங்களில் கூட போராட வேண்டிய நிலையிலே காணப்பட்டது.

தொடக்க ஆட்டத்தில் மிகவும் வலுக்குறைந்த அணியாகக் கருதப்பட்ட பெல்ஜியத்திடம் சமநிலை கண்டதால் ஒரு நிலையில இக்கட்டான நிலையை இந்திய அணி பெற்றது. இதையடுத்து நடந்த லீக் ஆட்டங்கள் ஒவ்வொன்றும மிக முக்கியத்துவம் பெற்றிருந்தன. அனைத்திலுமே வெற்றிபெற வேண்டிய கட்டாயம். லீக் போட்டிகளில் பாகிஸ்தானுடனும், நியூசிலாந்துடனும் மட்டுமே இந்தியாவுக்கு உறுதிகூறமுடியாத நிலை என்றாலும் நியூஸிலாந்தை 2-0 எனத் தோற்கடிதது ரசிகர்களுக்கு, அணியினர் நம்பிக்கை அளித்தனர்.

அத்துடன கனடாவை 6-4எனத் தோற்கடித்து அரையிறுதி வாயப்பைப் பெற்றதன் மூலம் ஒலிம்பிக் போட்டியில் விளையாடும் வாய்ப்பையும் வீரர்கள் உறுதிசெய்தனர். உலக நாடுகளுடன் போட்டியிடக கூடிய தகுதியைப் பெற்றுள்ள அணிகளில் இந்தியாவும் ஒன்று எனத் திட்டவட்டமாகக் கருதப்பட்டாலும் சமீப காலங்களாக ஆடடத்தில் இஸ்திரத்தன்மை காண முடியாத சூழலே உள்ளது. ஆட்டத்தின் முடிவில் ஏற்ற இறங்கங்களே காணப் படுகின்றன. உள் பின்களத்தில் இந்திய வீரர்கள் மிகவும் சோர் விழந்து காணப்படுவதே எதிராளிகள் முன்னேறுவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

மாட்ரிட் போட்டியில் கன்வல் பிரீத் சிங்குக்கும், திலீப் திர்கேவுக்கும் இவ்வளவுதான் திறமையா என எண்ணத் தோன்றியது. பெனால்டி கார்னர்களை கொடுப்பதில் மட்டுமல்ல, அதைப் பாதுகாப்பதிலும் வீரர்கள் தோல்யடைகின்றனர். பாகிஸ்தானுடனான ஆட்டததில் கிடைத்த 4 வாய்ப்புக்களையும் சோஹைல் அப்பாஸ் கோலாக்கியது குறிப்பிடத்தக்கது.

அதேசமயம் மையக்கள வீரர்களின் உறுதுணையுடன் கிடைத்த வாய்ப்புக்களையும் கட்சிதமாகக் கோலாக்க இந்திய முன்கள வீரர்கள் பெரும்பாலும் தவறும் நிலை தான் உள்ளது.

இவ்வளவு நாளாக ஒலிம்பிக தகுதியையே இலக்காகக் கொண்டிருந்தது இந்திய அணி. அதில் வெற்றியும் பெற்றுவிட்டது. அடுத்துள்ள முக்கியமான போட்டியும் அதுதான். நாட்டின் கௌரவமும் அடங்கியுள்ள ஒரு உன்னதமான போட்டி. ஆனால், அதில் பதக்கம் பெறவேண்டுமானால் பகீரதப் பிரயத்தனம் மேற்கொள்ளவேண்டிய கட்டாயம் இந்தியாவுக்கு உள்ளது. (தி-121)

# விளையாட்டுச் செய்திகள்

# சர்வதேச கிரிக்கெற் பேரவை

# பாக். - இந்திய அணிகளுக்கு அபராதம்

பாகிஸ்தானுக்கான கிரிக்கெற் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெற் அணிக்கும், பாகிஸ்தான் கிரிக்கெற் அணிக்குமிடையில் கடந்த சனிக்கிழமை கராச்சியில் நடைபெற்ற முதலாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெற் போட்டியின் போது குறிப்பிட்ட நேரத்திற்குள் தத்தமது 50 ஓவர்களையும் வீசத்தவறிய குற்றத்துக்காக இரு நாட்டு அணித் தலைவர்களுக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி மற்றும் பாகிஸ்தான் அணித் தலைவரான இன்சமாம் உல்ஹக் ஆகிய வீரர்கள் இந்தப் போட்டிக்கான கொடுப்பனவில் 20வீதப் பணத்தையும் மேலும் இருநாட்டு அணி வீரர்களுக்கான தனித்தனிக் கொடுப்பனவுகளில் 10வீதப் பணத்தையும் அபராதமாக செலுத்த வேண்டுமென சர்வதேச கிரிக்கெற் பேரவை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதேவேளை, சர்வதேச ஒரு நாள் கிரிக்கெற் போட்டிகளின் போது குறிப்பிட்ட நேரத்திற்குள் நிர்ணயிக்கப்படட 50ஓவர்களை வீசத் தவறும் அணிகளுக்கு அபராதம் விதிப்பது தொடர்பாக சர்வதேச கிரிக்கெற் பேரவை அறிமுகப் படுத்தியுள்ள ஒழுங்குவிதிமுறைகள் நியாயமற்றது என இந்திய கிரிக்கெற் அணியின் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார். இந்த விடயத்தில முதலில் பந்துவீசும் அணியே தண்டனைக்கு உள்ளாக்கப்படவேண்டும் எனவும், இரண்டாவதாக பந்துவீசும் அணியின ஓவர்கள் அதற்கமைய குறைக்கப்படுவதில்லையெனவும் அவர் குறை கூறியுள்ளார்.

பாகிஸ்தானின் கராச்சியில் நடைபெற்ற மிகப் பர பரப்பான இந்தப் போட்டியில் இந்திய அணி 5 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணியை வெற்றிபெற்றது. இந்தப் போட்டி நிறைவடைந்த பின்னர் இந்திய அணியின் முனனாள் கிரிக்கெற் வீரரான சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ள கருத்துப்படி இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான பரபரப்பான கிரிக்கெற் போட்டிகளை கடந்த பல்லாண்டுகளாக இரசிகர்கள் கண்டுகளிக்கும் வாய்ப்பை இழந்திருந்தனர்.

மீண்டும் ஒரு மிகப் பரபரப்பான கிரிக்கெற் போட்டிகளை இவ்விரு நாடுகளின் கிரிக்கெற் ரசிகர்கள் கண்டுகளிக்கத்தக்க முறையில் கராச்சியில் நடைபெற்ற போட்டி அமைநதிருந்ததாகவும் சுனில் காவஸ்கர் சுட்டிக்காட்டியிருந்தார். (தி-68)

# பாக்.முன்னாள் தலைவர் நீதிமன்றில் ஆஜர்

பாகிஸ்தான் கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவர் வஸீம் அக்ரம் வாகன அபகரிப்பு வழக்கில் கராச்சி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.

பாகிஸ்தானைச சேர்ந்த சதாம் குசைன் என்பவர் அக்ரம் மீது இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளார். லாகூரில் 1996ஆம் ஆண்டு தமது ஜீப்பை அக்ரம் அபகரித்துக் கொண்டதாக அந்த மனுவில் குஸையின் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்ட போது அக்ரம் சமூகமளிக்காத காரணத்தால் அவர் தலைமறைவாகிவிட்டதாக நீதிமன்றம் சில தினங்களுக்கு முன்னர் அறிவித்தது.

இதையடுத்து அக்ரம் கராச்சி நீதிமன்றத்தில் ஆஜரானார். சர்ச்சைகுரிய ஜீப்பை குஸைன் தனக்கு பரிசாக அளித்தார் என நீதிபதியிடம் கூறிய அக்ரம், ஜீப்பைத் தான் அழகுபடுத்தியிருப்பதால் அதை மீண்டும் தன்வசமாக்கிக் கொள்ள குஸைன் ஆசைப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (தி-121)

# ஒருநாள் கிரிக்கெற் போட்டியின் வெற்றி துடுப்பாட்ட வீரரிலே தங்கியுள்ளது

ஒருநாள் போட்டிகளைப் பொறுத்தவரை வெற்றியை தீர்மானிப்பவர்களாக துடுப்பாட்ட வீரர்கள் காணப்படுகின்றார்கள் என பாகிஸ்தான் கிரிக்கெற் அணியின் முன்னாள் நட்சத்திர துடுபபாட்ட வீரரும், தற்போதைய பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளருமான ஜாவிட் மியாண்டட் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியைப் பொறுத்தவரை 15ஆண்டுகளுக்குப் பிறகு எங்கள் நாட்டிற்கு வந்துள்ளார்கள. இங்கு அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது எங்கள் கடமை. அதேபோல் நாங்கள் 18ஆண்டுகளுக்கு பிறகு 1979ல் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது அவர்கள் எங்களுக்கு நல்ல வரவேற்பினை அளித்தார்கள். பல ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவிற்குப் பயணம் மேற்கொண்டதால் இந்திய ரசிகர்கள் எங்களைப் பார்ப்பதில் மிகவும் ஆர்வமாக இருநதார்கள் அத்துடன் நாங்கள் அங்கு போட்டிகளில் பங்கேற்றபோது அவர்கள் எங்களை உற்சாகப்படுத்தினார்கள்.


ஒருநாள் போட்டிகளைப் பொறுத்தவரை வெறறியை தீமானிப்பவர்களாக துடுப்பாட்ட வீரர்களே காரணம். இதறகு கராச்சியிலும், ராவல் பிண்டியிலும் நடைபெற்ற போட்டிகள் எடுத்துக் காட்டுகின்றன. கராச்சியில் நடந்த முதலாவது சர்வதேசப் போட்டியே என் வாழ்க்கையில் சிறந்த போட்டியாக அமையும். ஏனென்றால் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 349 ஓட்டங்களைப் பெற்றது. ஆனால் எங்கள வீரர்களோ பதிலுக்கு சிறப்பாக, சற்றும் சளைக்காமல் துடுப்பெடுத்தாடி 344ஓட்டங்களைப் பெற்றனர்.

நடந்து முடிந்த இரு போட்டிகளிலும் இந்திய அணியின் துடுப்பாட்ட வலிமை நன்கு தெரிந்தது சச்சின், ஷேவோக், டிராவிட், கங்குலி சிறப்பாக விளையாடினார்கள். முதலாவது போட்டியைப பொறுத்தவரை ஒரு திருப்புமுனையாக கை. ப் பிடித்தபிடி அமைநதது. அத்துடன நெருக்கடியான ஆட்டத்தின் கடைசி ஓவரை தைரியமாக வீசி எமது அணியை நெஹ்ரா தோல்வியுறச் செய்தார்.

நடந்துமுடிந்த இரு போட்டிகளிலும் இரு அணி வீரர்களும் சிறப்பாக விளையாடினார்கள். வெற்றி பெற வேண்டும் என்ற இலக்குடன் சிறப்பாக விளையாடுகிறார்கள். எமது அணியைப் பொறுத்தவரை குறிப்பாக இன்சமாம் தனக்குளள பொறுப்பை உணர்ந்து மிகவும் சிறப்பாக துடுப்பெடுத்தாடி வருகின்றார். அக்தர், சமி, ரஷாக் ஆகியோர் எதிர்பார்த்த அளவிற்குப் பிரகாசிக்கவில்லை. இவாகள் அதிக உதிரிகளை வழங்கியதால் துடுப்பாட்ட வீரர்களுக்கு அதிக நெருக்கடி ஏற்பட்டது. இவர்கள் உதிரிகள் வழங்குவதை நிறுத்திக் கொண்டு பந்துவீசினால் அடுத்து வரும் மூன்று போட்டிகளில் கட்டாயம் வெற்றிபெறலாம். (தி-121)

## முரளிதரனுக்கு பிரதமர் வாழ்த்து

500 விக்கெற்றுக்களை வீழ்த்தி கிரிக்கெற் உலகில் இலஙகைக்கான தேசியக் கொடியை மேலோங்கச் செய்த முரளிக்கு தனது வாழ்த்துக்களையும பாராட்டுக்களையும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். நேற்று அவுஸ்திரேலிய அணிக்கெதிரான போட்டியில் முரளி 500 விக்கெற்றுக்களை வீழ்த்தியதுடன் தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்டு அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தார்.




அவுஸ்திரேலிய அணிக்கெதிரான 2வது டெஸ்ட் போட்டியில் தனது 500வது விக்கெற்றை வீழ்த்தி டெஸ்ட் அரங்கில் 500விக்கெற்றுக்களுக்கு மேல் வீழ்த்திய வீரராக தன்னை இணைத்துக்கொண்ட முரளிதரன் பந்துவீசியவதைப் படத்தில் காணலாம்.

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

76

## நான்காம் பகுதி
## முக்குவர் சட்டம

### 1.மட்டக்களப்பு தேசம

### மாகோனும் வன்னிமைகளும்

கிழக்கிலுள்ள வன்னியர்களின் நடவடிக்கைகள் மீண்டுமொரு முறை இராசதானியின் கவனத்தைப் பெற்றன. கொட்டியாரம் பாணமை ஆகியவற்றின் " அரசர்கள்" போர்த்துக்கேயரோடு சேர்ந்து விட்டார்களெள்று இராசதானிக்குச் செய்தி கிடைத்து பதினாறு நாட்களிலே இராசதானிக்கு வரவேண்டுமென்று மன்னனிடமிருந்து அவர்களுக்கு நிருபங்கிடைத்தது. கொட்டியாரத்து வன்னிபம் தான் சுகயீனமடைந்திருப்பதாகச் சொல்லி தனது மருமகனைக் கண்டி நகருக்கு அனுப்பினான். வன்னியனாரின் பிரதிநிதியாகச் சென்ற மருமகன் மாமனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிராகரித்து அவனுடைய நடவடிக்கைகளைச் சாதுரியமாக நிதானப்படுத்தினான். அவனுடைய விளங்கங்களும் இராசதானியில் ஒப்புக்கொள்ளப்பட்டன.

பாணமை வன்னிபமாகிய சமரவாய் இராசதானியிற் சமூகமளிக்கத் தவறியதால் அவனுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானித்தனர். ஊவாவிற்குப் பொறுப்பாகவிருந்த "இளவரசன்" தலைமையில் 35 ஆயிரம் படையினரைக் கொண்ட சேனை பாணமைப்பற்றினை அழித்து விடுவதற்கென்று அனுப்பப்பட்டது. அங்குள்ள குடியானவர்கள் உபகாரங்களை அனுப்பியதோடு தங்களுடைய முறைப்பாடுகளைக் கேட்க வேண்டும் என்றும் வேண்டினார்கள் பின்பு வருடந்தோறும் செலுத்தப்படும் திறைக்கு மேலதிகமாகப் படைகளுக்குரிய இரு மாதக்கூலியாக 457ஆயிரம் லாறிம் பணத்தையும் கொடுக்கவேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

கி.பி. 1614ஆம் வருடத்திலே மட்டக்களப்பு வன்னிபத்திற்கும் பழுகாமத்து வன்னிபத்திற்குமிடையிலே போர் ஏற்பட்டது. ஊவாப் பிரதேசத்து அதிபனின் ஆதரவோடு மட்டக்களப்பு வன்னிபத்தை கொலை செய்து விட்டு அவனுடைய பகுதிகளையும் பழுகாமத்து வன்னிபங் கைப்பற்றி விட்டான்.

போர்த்துக்கேயரின் ஆதிக்கம் கிழக்கிலங்கையில் வீழ்ச்சியடைந்த காலத்தில், அவர்களுக்கு எதிரான போர்களிற் பெரிதும் பங்கு கொண்டதுடன் அவற்றில் ஈடுபட்ட உள்நாட்டுப் படைகளுக்கும் வன்னியரே தலைமை தாங்கினர்.

திருகோணமலையில் உள்ள போர்த்துக்கேயரின் கோட்டையை ஒல்லாந்தரின் கடற்படைத் தலைவனான வெஸ்றர் வோல்ட் (**Wester Wold**) 12 கப்பல்கள் அடங்கிய படையுடன் 1639ல் முற்றுகையிட்டான். அவனுக்கு உதவியாகக் கொட்டியாரம் , மட்டக்களப்பு, சம்மாந்துறை என்னும் பகுதிகளில் இருந்து உள்நாட்டுப் படைகள் சென்றன. மட்டக்களப்பு வன்னிபம் 500 போர் வீரர்களை அனுப்பியிருந்தான். கொட்டடியாரத்தில் இருந்து 500 படைவீரரும் அவர்களோடு தொழிலாளருஞ் சென்றிருந்தனர். கொட்டியாரத்து "அரசன்" கண்ணில் ஊனமுற்று 5வருடங்களாக நோய்வாய்ப்பட்டிருந்தான் என்றும் அதனால் அவன் போரிற் பங்கு கொள்ளமுடியவில்லை என்றும் சொல்லப்படுகின்றது. சம்மாந்துறை வன்னிபம் மட்டக்களப்பு வழியாக ஒல்லாந்தாருக்கு உதவி புரிவதற்குப் போயிருந்தான். அவன் மூலமாகக் கொட்டியாரத்து அரசனிடமிருந்து கோட்டைக்குப் போகும் இரகசியப்பாதையை ஒல்லாந்தர் அறிந்து கொண்டனர். அதன் பின் அவர்கள் போர்த்துக்கேயர் அறிய முடியாத வண்ணமாகக் கோட்டைக்குச் சமீபமாகச் சென்று விட்டார்கள். அங்குள்ள போர்த்துக்கேயர் சரணடைந்தனர். கோட்டை வாசலிற் காணப்படும் மீன் இலச்சினை பொறிக்கப்பெற்ற கற்பாறையில் உள்ள "குளக்கோட்டன் கல்வெட்டு" என்னும் சாசனம், போர்த்துக்கேயர் சரணடைந்த பின்பு உள்நாட்டுப்படைகளுக்குத் தலைமை தாங்கிச் சென்ற வன்னியரின் கட்டளைப்பிரகாரம் ஒரு விஜயஸ்தம்பமாக எழுதப்பெற்றதென்று கொள்ளலாம்.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் பற்றிய ஏட்டுச் சுவடிகள் சிலவற்றலே பூபாலகோத்திரம், குகன் இராசவன்னிமை என்ற இரு வம்சங்களைச் சேர்ந்த வன்னிபங்கள் சிலரின் பெயர்கள் காணப்படுகின்றன. அவை மேல் வருவனவாகும்.

### பூபால கோத்திர வன்னிபம்

1. அம்பகப் பண்டார வன்னிமை;
2. செல்லப் பண்டார வன்னிமை;
3. கற்பகப் பண்டார வன்னிமை;
4. கனகரட்ண பண்ணடார வன்னிமை;
5. அழகரட்ண பண்டார வன்னிமை;
6. அருணாசல பண்டார வன்னிமை;
7. ஆனந்த பண்டார வன்னிமை;

### குகன் இராசவன்னிமை

1. வெடியரசு கண்டராசா- வாளரசு வென்ற வன்னிமை;
2. வாளரசு கண்டராசா- போர் வீரவென்ற வன்னிமை;
3. தானரசு கண்டராசா- தண்டவாள் முண்ட வன்னிமை;
4. தண்டவாள் முண்டராசா- முண்டவன்னிமை;
5. காலிங்கராசா- மொறண்ட வன்னிமை;
6. படையாண்ட ராசா- அரசு நிலை காத்த வன்னிமை;

### ஐரோப்பியர் ஆட்சியில் வன்னிபப் பதவி

ஒல்லாந்தர் காலத்திலும் பிரித்தானியரின் ஆட்சிக்காலத்திலும் வன்னிபம் என்னும் பதவிப்பெயர் வழக்கில் இருந்தது. ஒல்லாந்தர் போடி மார்களிற் சிலரை வன்னிபங்களாக நியமித்தனர். 1766 இல் மண்முனைப்பற்று அறுமக்குட்டி போடிக்கு அவர்கள் வழங்கிய நியமனம் இதற்கோர் சிறந்த உதாரணமாகும். அறுமக்குட்டிப்போடிக்கு அவர்கள் வழங்கிய நியமனப்பத்திரம் மேல்வருமாறு உள்ளது.

"அறுமக்குட்டி சாதி முக்குவன் எங்களிடத்திலே மண்முனைப் பகுதிக்குப் போடியாய் இருக்கக் கேட்டபடியால் அதற்கு நாங்கள் நிர்ணயித்துப் பார்த்துத் தன்னுடைய நல்ல நடவடிக்கையைக் கேட்டுத் தீமானித்து முன் சொல்லப்பட்ட மண்முனைப்பகுதிக்குப் போடியாகக் கற்பிக்கிறோம். அது கூடக் கொடுக்கப்பட்டது .தமது தொழிலாளருக்கடுத்த சங்கையும் புரோசனமும் பெரியவர்களுக்கு நடக்கும் பூச்சியமும் பொது கிடைத்திருந்தபடிக்கு இப்போவும் அந்தப் பிரகாரம் தான் இதிற் கட்டளை பண்ணுகிறோம். இதில் அடங்கிய சகலமான பேரும் இந்த அறுமக்குட்டியைப் போடியாக அறிந்து உண்டானபடிக்குச் சங்கிக்க வேணும். இதற்கு அடையாளம் திட்டப்படுத்தி வழமையான முத்திரையும் வைத்து கையொப்பம் போட்டுக் கொடுத்தோம். இப்படிக்கு இலங்கைத்தீவிற் கொழும்புக்கோட்டை" (தொடரும்)

## தொழில் புரிவோருக்கான வீடமைப்புத் திட்டம்

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வீடற்றோரின் பிரச்சினைகனை சீர் செய்யும் முதல் நடவடிக்கையாக மீள் விற்பனை வீட்டுத் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. தேசிய வீடமைப்பு அதிகார சபையின் இத் திட்டத்திற்கென கிளிநொச்சி பொன்நகர் கிராமத்தில் இவ் வீடுகள் அமைத்துக் கொடுக்கப் படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொழில் புரிபவராகவும், வீட்டினுடைய மதீப்பிட்டுத் தொகையில் 25 வீதத்தை முற்பணமாக செலுத்தக்கூடிய திருமணமானவர்களாகவும் சொந்தக் காணிகள் இல்லாதவர்களாகவும் இருப்பவர்களே இத்திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளனர்.

தகுதியுடையவர்கள் எதிர் வரும் 25ஆம் திகதிக்கு முன்பு மாவட்ட முகாமையாளர், தேசிய வீடமைப்பு அதிகார சபை, கிளிநொச்சி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(து-35)

## கலைஞர்களும் , வீரர்களும் ஐ.ம.சு. முன்னணிக்கு ஆதரவு

(கொழும்பு)

தென்னிலங்கையில் உள்ள விளையாட்டு வீரர்களும், கலைஞர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவு வழங்கப்போவதாக உறுதியளித்துள்ளார்கள்.

தென்னிலங்கையில் உள்ள கலைஞர்களையும் விளையாட்டு வீரர்களையும் ஜனாதிபதி நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துப் பேசிய போதே இந்த உறுதிமொழியை அவர்கள் வழங்கினார்கள்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்ததும் விளையாட்டுத் துறையையும் கலைத்துறையையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்,

சகல மாவட்டங்களிலும் விளையாட்டு, கலாசார நிலையங்களை நிறுவுவதற்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து நிதியுதவி செய்யப்படும் எனவும் இச் சந்திப்பின் போது ஜனாதிபதி உறுதியளித்தார்.

(து-60,10)

## காரைநகர் பிரதேசத்தில் தேர்தல் பிரசாரம் சூடுபிடிக்கிறது

(காரைநகர்)

காரைநகர் பகுதிகளில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி இடம்பெறவுள்ள 13வது நாடாளுமன்றத் தேர்தலில் வாக்குகளை சுவீகரித்துக் கொள்வதற்காக இப் பிரசார நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேட்சைக் குழுவினர் ஆகியோர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, இப்பகுதிகளில் பிரசார நடவடிக்கைகளுக்காக ஒட்டப்பட்டுவரும் கட்சிக்காரர்களின் பிரசார சுவரரொட்டிகளை அகற்றுவதில் பொலிஸார் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(து-4,246)

---

### நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஐக்கிய நாணய சங்கத்தின் இவ்வாண்டிற்கான நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு சமீபத்தில் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவராக க.சின்னராசாவும், உபதலைவராக சோ. ரஜதகிரீசக் குருக்களும், செயலாளராக சோ. சந்திரசேகரனும், உப செயலாளார கு. சிவகுமாரும், பொருளாளராக வே.நல்லதம்பியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதைவிட நிர்வாக சபை அங்கத்தவர்களாக த.திருநாவுக்கரசு, கு.சிவாநந்தன், நா. சிவமனோகர், ந. கஜேந்தினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (து-4)

### நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு

(சுதுமலை)

யாழ். மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் இவ் வருடத்திற்கான நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

அந்த வகையில் தலைவராக வை.நக்கீரனும், உபதலைவராக எஸ். ஜெயசங்கரும், செயலாளராக வி. தயிமோகனும் ,பொருளாளராக பி. கோகிலேந்திரனும், கணக்குப்பதிவாளராக எஸ். பிரணவனும், விளையாட்டுப் பொறுப்பாளராக டிராஜரவிதர்மாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (து-4, 252)

### செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

நூலக ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் எதிர்வரும் 26,27 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. இதில் யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் நூலக ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(சு-4,3)

### பங்குனி உற்சவம்

(காரைநகர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலயத்தின் வருடாந்தப் பங்குனி உற்சவம் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகும்.

கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10நாட்கள் நடைபெறும். இவ் உற்சவகாலத்தில் பஞ்சரதப்பவனி, மகேஸ்வர பூஜை என்பன சிறப்பாக இடம்பெறும்.

(து-246)

### இயந்திரவியல நிபுணர்கள் யாழ். வருவர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் தலைமைப் பீடத்தில் இருந்து 14 இயந்திரவியல் நிபுணர்கள் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

திறந்த பல்கலைக்கழகத்தின் இயந்திரவியல் கற்கை நெறியை பயில்வதற்காக விண்ணப்பித்த 350 யாழ். மாவட்ட விண்ணப்பதாரிகளின் பதிவுகளை மேற்கொள்வதற்காகவே யாழ். வருகின்றனர்.

இவர்களின் பதிவு நடவடிக்கைகள் எதிர்வரும் 20 , 21ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அலுவலகத்தில் இடம்பெறும்.

(து-19)

### மக்கள் சிரமம்

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கு மாமுனை முதல் சுண்டிக்குளம் வரையான கடற்கரை வீதியைப் புனரமைப்பதற்கு கற்கள் பறிக்கப்பட்ட போதும் இதுவரை புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இதனால் இவ்வீதியால் பிரயாணம் செய்யும் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

(து-42)

# இன்று ஒரு தகவல்

## மன நிறைவு

ஒருஅரசன் இருந்தான். யயாதி என்று பெயர் அவனுக்கு. அவனுக்கு நூறு வயது. வாழ்க்கையில் அனுபவிக்கவேண்டிய எல்லாவற்றையும் அனுபவித்துவிட்டான். ஒருநாள் மரணம் அவனைத் தேடி வந்தது. “இதோபாரப்பா உனக்கு நேரம் வந்துவிட்டது. உன்னை அழைத்துக்கொண்டுபோகத்தான் வந்திருக்கிறேன்” என்றது.

இவன் பெரிய ராஜாதான். போரில் வீரத்தைக் காட்டியிருக்கிறான். இருந்தாலும் இப்போது நடுங்க ஆரம பித்துவிடடான். “என்ன இது இவ்வளவு விரைவாக வந்துவிட்டாய் நூறு வருடம்தான் வாழ்ந்திருக்கிறேன் அதற்குள் வந்து விட்டாயே என்னை அழைத்துக்கொண்டு போவதற்கு” என்றான். “என்னப்பா இப்படிச்சொல்கிறாய் உன் பிள்ளைகள் எல்லோரும் தாத்தாவாகிவிட்டனர். இன்னும் உனக்கு என்னவேண்டும்” என்றது மரணம்.

அந்த ராஜாவிற்கு நூறு மனைவிகள், நூறு பிள்ளைகள். ஆனால் ஒருயோசனை செய்தான். அதன் பின் கூறினான்.“இதோ பார் நீ வந்துவிட்டு வெறுங்கையுடன் போகமாட்டாயென்று எனக்குத் தெரியும். என் பிள்ளைகள் நூறுபேர் இருக்கின்றனர் அவர்களில் யாரையாவது கேட்டுப் பார்க்கிறேன் எனக்குப் பதிலாக நீங்கள் யாராவது போகிறீர்களா என்று. யாராவது ஒருவரை சம்மதிக்கவைத்து அனுப்புகிறேன். என்னை இன்னும் நூறு வருடம் வாழவிடு” என்றான்.

மரணம் கூறியது “உனக்குப் பதிலாக வேறு ஒருவர் என்னுடன் வந்தால் போதும். இருந்தாலும் நீ எல்லோருக்கும் அப்பா. எல்லோரையும் விட நீதான் அதிக நாட்கள் வாழ்ந் திருக்கிறாய். எல்லாவற்றையும் அனுபவித்திருக்கிறாய். அப்படியிருக்கும் போது உன் பிள்ளைகள் எப்படி என்னு டன் வர சம்மதிப்பார்கள்?”என்றது.

இருந்தாலும் அந்த ராஜாவுக்கு நம்பிக்கையிருந்தது. பிள்ளைகள் ஒவ்வொருவரையும் கூப்பிட்டான். மூத்த பிள்ளைகள் ஒன்றுமே பேசாது நழுவிப்போக ஆரம்பித் தனர். கடைசி மகன் ஒருவன் 16 வயதுதான். அவன் முன்வந்தான். “நான் தயார் என்னை அழைத்துக கொண்டு போ” என்றான். இவனைப் பார்த்ததும் மரணம் இரக்கப்பட ஆரம்பித்தது. “என்னப்பா இது ஒன்றுமே தெரியாதவனாக இருக்கிறாயே உன்னைவிட பலமடங்கு வயதுக்கதிகமான உனது மூத்த சகோதரர்கள் 99 பேர் அவர்கள் இன்னும் இந்த உலகில் வாழவேண்டும் என ஆசைப்படும்போது நீ இப்படிக் கூறுகிறாயே நன்கு யோசித்துச் சொல்” என்றது.

“நான் நன்கு யோசித்துத் தான் கூறுகிறேன். என் அப்பா நூறு வருடங்கள் வாழ்ந்திருக்கிறார் என் சகோதரர்கள் எல்லோரும் என்னைவிட அதிகம் வாழ்ந்திருக்கிறார்கள் அவர் களுக்குத் திருப்தி ஏற்படவில்லை. இதைப் பார்க்கும்போது எனக்கு ஒருவிடயம் நன்கு புரிகிறது. அதாவது நான் நூறு வருடங்கள் வாழ்ந்தாலும் கூட எனக்கும் திருப்தி ஏற்படப் போவதில்லை. அப்படியிருக்கும்போது நான் இப்போது போனால் என்ன? இன்னும் 90 வருடம் கழித்துப் போனால் என்ன? பேசாமல் என்னை அழைத்துக் கொண்டு போ” என்றான். மரணம் அந்தப் பையனை அழைத்துச் சென்றது.

அதன்பின் நூறு வருடம் கழித்து மரணம் மீண்டும் வந்தது. அந்த ராஜாவை சந்தித்தது. இப்போதும் அந்த ராஜா அதே நிலையில் தான் இருந்தான். இப்போது அவன் என்ன கூறினான் தெரியுமா? “இந்த நூறுவருடம் போனதே தெரியவில்லை. அவ்வளவு வேகமாகப் போய்விட்டது. என்னால் நிதானமாக அனுபவிக்க முடியவில்லை. எனது வயதான பிள் ளைகள் எல்லோரும் இறந்துவிட்டனர். எனது அடுத்த தலை முறை வந்துவிட்டது. இப்போது எனக்குப் பதிலாக இன் னொருவனை அனுப்புகிறேன்” என்றான். மரணம் சரி என்று கூறி வேறொருவனை அழைத்துச் சென்றது.

இப்படியே 9 தடவை முடிந்தது. அந்த ராஜா 900 வரு டம் அதிகமாக வாழ்ந்தான். 10வது முறை மரணம் வந்து நின்றது . இப்போது அவன் சொன்னான் “நீ முதல் தடவை வந்தபோது நான் எப்படித் திருப்தியடையாதவனாக இருந்தேனோ அதேநிலையில் தான் இப்போதும் இருக்கிறேன். இப்போதும் எனக்கு உன்னுடன் வர விருப்பமில்லை. இருந் தாலும் வருகிறேன். ஏனென்றால் எத்தனை முறைதான் உன்னிடம் சலுகை கேட்பது? கேட்பது மிக அதிகம்.

இருந்தாலும் ஒருவிடயத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டேன். 1000 வருடத்தில் என்னால் திருப்தியடைய முடியாவிட்டால் 10000 ஆயிரம் வருடம் வாழ்ந்தாலும் திருப்தி யடைய முடியாது. புறப்படு போகலாம்” என்றான்.

இதுதான் சார் நாம் இப்போது வாழும் வாழ்க்கை. இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தக் காலத்து குடும்பஸ்தர் ஒருவர். அவரைத் தேடி மரணம் வந்தது. அவர் முன் நின்றது. “நான் மரணம் வந்திருக்கிறேன் உன்னை அழைத்துக் கொண்டு போக” என்றது. இவருக்குக் கோபம் வந்துவிட்டது. உடனே அதன் கன்னத்தில் பளார் என்று அறைந்து விட்டார். மரணம் கன் னத்தைத் தடவிக்கொண்டே “ஏன் என்னை அறைந்தாய்?” என்றது. “பின்னே என்ன எவ்வளவு காலமாக உனக்காகக் காத்திருப்பது? ஏன் இவ்வளவு லேற்? ” என்றார் அந்த ஆள்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அரசியல்வாதிகளின் வாக்குறுதியை பொது மக்கள் நம்பக்கூடாது

## சமயப் பேரவை தெரிவிப்பு

(கொழும்பு)

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் ஒன்றை நடத்த சகல அரசியல் கட்சிகளும் அாபபணிப்புடன் ஈடுபடவேண்டும். பதவி மோகம் கொண்ட சில ஊழல் அரசியல்வாதிகளின் வார்த்தைகளைக் கேட்டு வன் முறைகளில் இறங்க வேண்டாம் என நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான சமயப் பேரவை சகல கட்சிகளையும் கேட்டுள்ளது.

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே தேர்தலுக்கான சமயப் பேரவை இவ்வாறு கேட்டுள்ளது.

பாராளுமன்றத்துக்கு வன்முறையாளர்களையும் ஊழல் வாதிகளையும் அனுப்பவேண்டாம்.

மக்களுக்குத் திருப்தியளிக்கும் வகையில் உறுதி மொழிகளை அரசியல்வாதிகள் வழங்கி வருகின்ற போதும், அதனை நடைமுறைப்படுத்து வார்களா என்பது தான் கேள்விக்குறியாகி யுள்ளது. இது தொன்றுதொட்டு வரும் ஒரு விடய மும் கூட. இதனால் இவர்களின் கசப்பு வார்த்தை களை நம்பவேண்டாம்.

எனவே,. தேர்தலில் வாக்களிக்கப்போகும் வாக் காளர்கள் மிகவும் நிதானமாகச் செயற்பட்டு வாக் களிக்க வேண்டும் என்றும் அப்பேரவை மக்களைக் கேட்டுள்ளது. (தி-61-10)

# விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு நல்ல அறிகுறி—ஜனாதிபதி

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடாத்தத் தாம் தயாராக இருப்பதாக புலிகள் எனக்கு அறிவித்துள்ளனர். ஆனால் இதனை நடைமுறைப்படுத்துவது அவ்வளவு எளிதல்ல என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

“தனிநாட்டிற்கு வழிவகுக்கக்கூடிய பேச்சுக்களுக்கு நான் தயாரில்லை. ஆனால் நாட்டின் இறைமைக்காகப் பேச்சுக்களில் ஈடுபடுவேன். ஆட்சிபீடமேறும் எந்த அர சாங்கத்துடனும் பேசத் தயார் எனப் புலிகள் அறிவித் திருப்பது நல்ல அறிகுறி” என ஜனாதிபதி மேலும் கூறி னார்.

1994இல் அறிமுகப்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத் தங்கள் நாம் ஆட்சிக்கு வந்த இரண்டு கிழமைக்குள் அமுல்படுத்தப்படும் என்றார்.

ஞாயிறு தினங்களில் ரியூசன் வகுப்புக்களை தடை செய்து பௌத்த தர்மத்தைக் கட்டாயம் படிப்பிக்கவேண்டும் என சட்டம் கொண்டு வருவீர் களா? எனக் கேட்டதற்கு, பாடசாலை மாணவர் களும் தாய்மார்களும் என்னை கெட்டவார்த்தை களால் திட்டுவார்களா? என ஜனாதிபதி கேட்டார்.

இது தவிர, அம்பாந்தோட்டை மாவட்டத்தில் குடிநீர்த் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷவிடமும் முன்னாள் எம்.பி. மகிந்த அமரவீரவிடமும் 95.7 லட்ச ரூபாவை ஜனாதிபதி வழங்கியுள்ளார்.(து-6)

# இராசிபலன்

**18. 03. 2004**

**(பங்குனி 05, வியாழக்கிழமை)**

**துவாதசி முற்பகல் 7.06 மணி வரை**
**திரயோதசி பின்னிரவு 5.54 மணிவரை**
**அவிட்டம் முன்னிரவு 10.24 மணிவரை**
**இராகுகாலம் 1.48-3.18 மணிவரை**
**சுபநேரம் 7.48-9.18 மணிவரை**

***பிரதோச விரதம்***

**மேடம்**
எடுத்தகாரியம் கைகூடும், தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, ஆனந்தம்.

**இடபம்**
பிரபுத்தனம், தடைப்பட்டகாரியம் கைகூடும், கௌரவம், தேக ஆரோக்கியம்.

**மிதுனம்**
எதிர்பாரத செலவு, உத்தியோக பங்கம், பொருள் விரயம், கட்டுப்பாடு.

**கடகம்**
மனக்கவலை, சரீரபீடை, காரிய தாமதம், வாகன பயம்.

**சிங்கம**
சௌபாக்கியம், குடும்ப மகிழ்ச்சி, காரிய நன்மை, பிரயாணம்.

**கன்னி**
ஜனவசியம், உற்சாகம், நோய் குணமடைதல், தன லாபம்.

**துலாம்**
காரியதாமதம், தாழ்ந்த சுபாவம், எதிர்பாரத நன்மை, சொத்துக்களால் கவலை.

**விருச்சிகம்**
புதிய விடயம், ரோக நிலை, முயற்சி தாமதம், தாய்வழி உறவு.

**தனுசு**
மனோதைரியம், தனவரவு, நற்கீர்த்தி, காரிய நன்மை.

**மகரம்**
அதிக செலவு, போசன சுகக்குறைவு, மனோசங்கடம், முயற்சி தாமதம்

**கும்பம**
வெகுமானம், கௌரவம், போசன சுகம், முயற்சி பலிதம்.

**மீனம்**
பிதா சிந்தை, இடமாற்றம், அமைதிக்குறைவு சோம்பல் நிலை.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

**- வளவன்.**

# தேர்தல் பிரசாரத்தை நிறுத்த அரசியல் கட்சிகள் சதிமுயற்சி

## ஹக்கீம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அக்கரைப்பற்றில் நேற்று முன்தினம் நடாத்தப் பட்ட ஹர்த்தால், தனது கட்சியின் தேர்தல் பிரசா ரத்தை தடை செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சி என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித்தலைவர் ரவூப் ஹக்கீம் குற்றம் சாட்டியுள் ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு எதி ரான ஓர் அரசியல் கட்சியின் பின்னணியிலேயே இந்த ஹர்த்தால் நடைபெற்றதாக சுட்டிக்காட்டிய ஹக்கீம் ,

ஹர்த்தால் தினத்தன்று தீவிர பொலிஸ் பாது காப்புடன் தாம் தேர்தல் பிரசாரம் மேற்கொண்ட தாக வெளிவந்த செய்தியையும் நிராகரித்தார்.

அரச வங்கிகள், வர்த்தக நிலையங்கள், பாட சாலைகள் என்பன இயங்காதிருந்ததுடன்,போக்கு வரத்தும் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்த தால் தாம் மேற்கொள்ளவிருந்த தேர்தல் பிரசார நடவடிக்கைகள் அன்றைய தினம் இடைநிறுத்தி வைக்கப்பட்டதாகவும் ஹக்கீம் மேலும் தெரி வித்தார். (து-60,10)

# ஆலயங்கள் மீதான தாக்குதலை தடுப்பதற்கு புதிய பொலிஸ் பிரிவு

(கொழும்பு)

ஆலயங்கள் மீது மேற்கொள்ளப்படும். பயங் கரவாதத் தாக்குதல்களைத் தடுப்பதற்காகப் புதிய பொலிஸ் பிரிவு ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.

ஆலயங்கள் மீது நடத்தப்படும் பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பொலிஸ்மா அதிபருக்கு விடுத்த பணிப்புரையையடுத்தே இந்தப் புதிய பொலிஸ் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஆலயங்கள் மீது தாக்குதல்கள் ஏதும் இடம்பெறக்கூடிய வாய்ப்புக்கள் இருப்ப தாகக் கருதும் பொதுமக்கள் உடனடியாக அது தொடர்பான தகவல்களை 23 25450, 24 36536, 23 27839 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என அறி விக்கப்பட்டுள்ளது. (து-60,10)

# அன்னை பூபதி நினைவு நிகழ்வு

(மட்டக்களப்பு)

உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த அன்னை பூபதித் தாயின் 16வது ஆண்டு நினைவினை அனுஷ்டிக்கும் வகையில் நாளை வெள்ளிக் கிழமை மட்டு.-அம்பாறை மாவட்டங்களில் இருந்து பாரிய எழுச்சிப் பேரணிகளை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாழைச்சேனை, கரடியனாறு, மண்டூர் மற்றும் அக்கரைப்பற்றிலிருந்து புறப்படும் இப் பேரணி கள் காலை 10.00மணிக்கு மட்டக்களப்பு அமிர்தகழி சிறிமாமாங்கேஸ்வரர் ஆலயத்தை சென்றடையும். அங்கே பொதுக்கூட்டம் நடை பெறவுள்ளது. (த)

சென்ற இடத்தில் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு - குறள்

வலம்புரி

## தேர்தல் முறுகல் நிலை வாக்களிப்பை பாதிக்கும்

யாழ். மாவட்ட தேர்தல்களம் இப்போது சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. தேர்தலில் வாக்காளர்கள் அக்கறைகொள்வதில் ஆமை வேகத்தைக் கொண்டிருந்தாலும், வேட்பாளர்களின் வேகம் உச்சக்கட்டத்தை அடைந்து விட்டதை கடந்த சில நாட்களில் நடந்த சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன.

வேட்பாளர்கள் தத்தம் கட்சிகளுக்காக வீதிகள் தோறும் சென்று ஆதரவு தேடுகின்றனர். தமது வாக்கு வேட்டையில் துண்டுப் பிரசுரங்கள், ஒலி பெருக்கிகள், பத்திரிகை விளம்பரங்கள் என தேர்தல்கள ஆயுதங்களுக்கும் குறைவில்லை.

வேட்பாளர்கள் போடுகின்ற அரோகரா கோஷத்தால் வாக்காளர்களுக்கு சற்று உருஏறத் தொடங்கி விட்டது. எனினும், வேட்பாளர்கள் போடும் அரோகரா கோஷம் சுருதி மாறுவதுபோல் தெரிகின்றது. அரோகரா ஒலி எழுப்பி வாக்காளர்களை உருக்கொண்டு ஆடவைப்பது நானா, நீயா என்ற போட்டி தலைதூக்கியுள்ளதால், வேட்பாளர்களுக்கிடையே ஆங்காங்கே முறுகல் நிலையும் தோன்றியுள்ளது.

வீடுகளுக்குச் சென்று-துண்டுப் பிரசுரம் வெளியிட்டு-ஒலிபெருக்கிகளில் கோஷமெழுப்பி-பத்திரிகைகளில் பொறிபறக்கும் வசனங்களைத் தெறிக்கவிட்டு வாக்காளர்களுக்கு ஓரளவு உரு ஏற்றிய நிலையில், ஏற்படும் முறுகல்நிலையானது இரண்டு விளைவுகளைத் தரலாம்.

அதில் ஒன்று, வேட்பாளர்கள் போடும் சுருதி மாறியதால், வாக்காளர்களின் உரு முறிந்து சோம்பலாக மாறி, வேண்டாவெறுப்பாகிப்போய் வாக்களிப்பில் அக்கறைகாட்டாது விடலாம்.

மற்றையது உருவுக்கு ஒத்திசைவாகக் கோஷம் போடாமல் கோஷங்களை அடிக்கடி மாற்றிவிட அதனால் ஆத்திரம்கொண்ட வாக்காளர்கள், உக்கிரதாண்டவ உருவாடி, வேண்டாத வகையில் தங்கள் படைப்பான வாக்குகளைப் போட்டு அடங்கிப் போகலாம். எனவே, இதில் எதை வாக்காளர்கள் செய்வார்கள் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாது போனாலும்,

யார் வாக்காளர்களுக்கு இசைவாக அவர்களைத் தம்பக்கம் இழுத்து, மெதுவாக உருவேற்றி ஆடவைக்கின்றார்களோ, அவர்களுக்குத்தான் சிம்மாசனம் கிடைக்கும் என்பது மட்டும் தெளிவு.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை, மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு சீரழிந்து போயுள்ளனர். அவர்கள் தேர்தல்களத்தைச் சந்திக்கும் மனநிலையில் இல்லை. அவர்களைப் பொறுத்தவரையில் வாழ்ந்தமண், உடைந்துபோன வீடு, இழந்துபோன சொத்து, பிரிந்துபோன உறவு இவற்றிலேயே அவர்களின் நினைவுகளும், நிஜங்களும் உள்ளன.

நாளைய சீவியம் எப்படியாகும்! கூலித்தொழில் கிடைக்குமா? குழந்தையின் உணவுக்கு வழிபிறக்குமா? என்ற ஏக்கத்துடன் உறங்கி, அந்த ஏக்கத்தின் அதிர்விலேயே விழித்துக்கொள்கின்ற நிலையில் தேர்தல் பிரசாரங்கள் மக்களின் காதுகளைச் சென்றடைவது கடினமே.

இந்த யதார்த்தம் கடந்த தேர்தலின்போது நிரூபணமாகியுள்ளது. அதாவது, கடந்த தேர்தலின் போது, யாழ். மாவட்டத்தில் 19 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் செல்லுபடியற்றதாகியமை மேற்போந்த நிகழ்வுக்குச் சான்றாகும்.

தேர்தல் பற்றி எதுவித அக்கறையும் கொள்ளாது ஏதோவொரு உந்தல் காரணமாக வாக்குச்சாவடிக்குச் சென்று கடன் கழித்ததுபோல் கருமமாற்றியதன் விளைவே அதுவாகும்.

எனவே, பிரசாரங்களைச் செய்து வாக்காளர்களை வாக்குச்சாவடிக்குத் துரத்துவது மட்டும் வேட்பாளர்களினதும், கட்சிகளினதும் கடமையாக இருக்கக்கூடாது.

மாறாக தத்தம் தேர்தல் விஞ்ஞாபனம், தாம் முன்னெடுக்கவுள்ள விடயங்கள், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் என்பவற்றை முன்வைத்து இத்தேர்தலில் நாம் வாக்களிக்கவேண்டும் என்ற மனஉணர்வை மக்களிடம் ஏற்படுத்த வேண்டும். இதனை விடுத்து திடீர் திடீரென வேட்பாளர்கள் முறுகல் அடைவது அதனால் அவ்வப்பகுதிகளில் பதற்றம் ஏற்படுவது இவையெல்லாம் பொதுமக்களாகிய வாக்காளர்களைத் தேர்தலில் இருந்து அந்நியப்படுத்துமே தவிர தேர்தலில் ஆர்வத்தை ஏற்படுத்தமாட்டாது. சுருங்கக் கூறின் வேட்பாளர்களின் முறுகல்நிலை வாக்காளர்களின் வாக்களிப்பு வேகத்தைப் பாதித்து விடும்.

# தலைவரின் சரியான வழிநடத்தலில் தமிழினம் வலுப்பெற்றுள்ளது

## சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு


(யாழ்ப்பாணம்)

தமிழீழத் தேசியத் தலைவரின் சரியான வழிநடத்தலில் அணி திரண்டுள்ளதால் தமிழினம் வலுவான ஒரு சக்தியாக தனது இருப்பினை உறுதிசெய்துள்ளது என தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்சசெல்வன் தெரிவித்துள்ளார்

சமகால அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக அவுஸ்திரேலிய, கனேடிய தமிழ் வானொலிகளுக்கு வழங்கிய விசேட செவ்வியின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் தொடாச்சியாக சிங்களப் பேரினவாதிகளால் ஏமாற்றப்பட்டே வந்துள்ளனர். கடந்த காலங்களில் நடந்தது போன்று புலிகளின் காலத்தில் தமிழ மக்களை ஏமாற்ற நினைப்பது சாத்தியமற்றது. இந்தவிடயத்தில் தமிழீழத் தேசியத் தலைவர் மிகவும் நிதானமாகச் செயற்பட்டு வருகிறார். இவரின் வழிநடத்தலில் தமிழினத்திற்கு விடுதலையைப் பெற்றுக் கொடுப்பதற்காக புலிகள் பலமாகவே இருந்து வருகின்றனர்.

மீண்டும் எம்மை ஏமாற்றி ஒரு யுத்தத்தினை பேரினவாதிகள் திணித்தால் அதை எதிர்கொள்ளவும் புலிகள் தயாராகவே உள்ளனர். இந்தப் பலத்தை உணாந்துதான் அரசாங்கம் ஒருபேசசுவாதைக்கு எம்மை அழைத்துளளது.



தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு பலமான நிலையில் நின்றுகொண்டு தான் மக்கள் ஆணையைப் பெற்றுக் கொள்வதற்காக இன்று தேர்தலை ஆதரிக்கின்றனர். இந்தத் தேர்தலில் மக்கள் தமது மன உணர்வுகளை வெளிப்படுத்துவதற்குப் பூரண சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். இது தடுக்கப்படுமானால் மக்களின சில முடிவுகள் அரசின் செயற்பாடுகளைப் பாதிக்கும். பின் மக்களின் முடிவுகளையிட்டு அரசு கவலைப்படவேண்டி வரும் என்றார். (து-4,64)

## 1000 மில்லியன் நஷ்டஈடு கோரி ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

சமுர்த்தி அமைச்சு எஸ்.பி.திஸ்ஸநாயக்கவின் கீழ் இருந்த காலத்தில் சமுர்த்திப் பயனாளிகளின் சேமிப்பில் இருந்த 2 மில்லியன் ரூபாவை கையாடல் செய்தாரென ஜனாதிபதி குற்றஞ்சாட்டியமைக்காக ஆயிரம் மில்லியன் ரூபாவை நஷ்டஈடாக வழங்கவேண்டுமென சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திஸ்ஸநாயக்கவின் வழக்கறிஞர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்கள்.

இக்கடிதம் கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பப்பட்டுள்ளது. ராகமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் ஜனாதிபதி இந்த அவதூறுக் குற்றச்சாட்டை அமைச்சர் மீது சுமத்தியுள்ளாரென அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாக தென்னிலங்கையிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகையொன்று வெளியிட்டுள்ளது. (தி)

## நினைவுச் சின்னம் அமைக்க இடம் வழங்கக் கோரிக்கை

(கொழும்பு)

1987 ஆம் ஆண்டில் இந்திய அமைதி காக்கும் படைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற யுத்தத்தில் உயிரிழந்த இந்திய அமைதிப் படையினருக்கு கொழும்பில் நினைவுச் சின்னம் எழுப்புவதற்கு இடம் ஒதுக்கித் தருமாறு இராணுவம் கொழும்பு மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

உயிரிழந்த இந்திய அமைதிப் படையினருக்கான நினைவுச் சின்னம் அமைப்பதற்கு கொழும்பில் உள்ள பிரபலமான பூங்கா ஒன்றிலேயே இடம் ஒதுக்கித் தருமாறு இலங்கை இராணுவம் மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (து,ம)

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமம் சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தப்பட்டுவரும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப.10.30மணிக்கு பெரியபுராணம் தொடர் சொற்பொழிவை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையயாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார். இதன் அறிமுகவுரையை ஆசிரியர் இ.மகேஸ்வரராஜ் வழங்குவார். (து-35)

### தினசரி தியானம்

### சாயி அருளமுதம்

நான் சொல்வது யாதெனில் இந்தச் சாயி அவதாரத்தின்போது வெற்றிகளும் தோல்விகளும் கொண்ட காட்சிகளைக் காட்டும் நாடகம்கூட இருக்கமாட்டாது. எனது சங்கல்பம் நடைபெறவே வேண்டும். நான் திட்டமிடுபவை வெற்றியடைய வேண்டும். ஸத்யம் நானே. தாமதிக்கவோ அச்சமடையவோ வளைந்து கொடுக்கவோ வேண்டிய தேவை ஸத்யத்துக்கு இல்லை.

நாளாந்த நற்சிந்தனை.

## 'லங்கா தீப' ஆசிரியரிடம் வீரவன்ச மன்னிப்புக் கோரினார்

(கொழும்பு)

"லங்கா தீப" பத்திரிகையில் தனக்கு எதிராக வெளியிடப்படவிருக்கும் ஒரு விளம்பரம் சம்பந்தமாக, அப்பத்திரிகையின் பிரதம ஆசிரியர் சிறி ரணசிங்காவை மிரட்டியதற்காக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச அவரிடம் மன்னிப்புக் கோரினார்.

அப்பத்திரிகையின் பிரதம ஆசிரியருக்கு விமல் வீரவன்ச எழுதிய கடிதமொன்றில் அவரை மிரட்ட வேண்டுமென்ற எண்ணம் எனக்குச் சிறிதளவுகூடக் கிடையாது. தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் பலவற்றில் தொடர்ந்து உரையாற்றி வருவதால் தனது குரல் கடுமையானது போல அவருக்குக் கேட்டிருக்கலாம் எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

கடந்த புதன் இரவு லங்கா தீப ஆசிரியரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட வீரவன்ச தனக்கு எதிரான விளம்பரமொன்று அடுத்தநாள் பத்திரிகையில் வெளிவரவுள்ளதாகத் தான் அறிவதாகவும், அவ்விதம் அவ் விளம்பரம் பிரசுரிக்கப்படுமேயானால் அது சம்பந்தமாகச் சட்ட நடவடிக்கை எடுப்பது மாத்திரமன்றி, பத்திரிகை அலுவலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதுடன், பத்திரிகைக் காரியாலயத்தையே தாக்குவோமென்றும் எச்சரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

## கருணாவின் நிலைப்பாட்டால் வேட்பாளர்கள் அதிருப்தி

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து விலகித் தனி வழி செல்லும் கருணாவுக்குமிடையிலான சந்திப்பு ஆரோக்கியமானதாக இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் பிரசாரத்தின்போது பிரதேசவாதத்திற்கு முன்னுரிமை கொடுத்து கிழக்கு மாகாண அபிவிருத்தியை மட்டும் இலக்காகக் கொண்டு செயற்படவேண்டுமென்ற கருணா தரப்பின் வேண்டுகோளுக்கு வேட்பாளர்கள் மத்தியில் ஒருமித்த கருத்துப் பிரதிபலிக்கவில்லை. இதனால், கூட்டமைப்பு வேட்பாளர்கள் மத்தியில் கருணாவுக்கு விசுவாசமானவர்களும் வன்னித் தலைமைக்கு விசுவாசமானவர்களும் இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் பெண் வேட்பாளரான சபாபதி யோகாம்பிகை கடந்த வெள்ளி இரவு பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியை அடுத்து அவர் கருணா அணியினரால் எச்சரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (து,ம)

### தவக்கால சிந்தனை-23

நாட்டிற்கு நாடு பிளவு ஏற்பட்டதால் போர், கணவன் மனைவியிடையே பிளவு ஏற்பட்டதால் விவாகரத்து, பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் பிளவு ஏற்பட்டதால் ஊதாரித்தனம், பங்குக் குருவுக்கும் பங்கு மக்களுக்குமிடையில் பிளவு ஏற்பட்டதால் வளர்ச்சிக்குத் தடை. ஆக, தனக்குத் தானே பிளவுபடும் அரசோ, குடும்பமோ, நிறுவனமோ பாழாய்ப் போகுமன்றோ! நன்மைக்கும் தீமைக்கும் பிளவு ஏற்படுவது முறைதானே! அதை வரவேற்கத்தானே வேண்டும். இதோ இயேசுவின் நன்மைச் செயலை சிலர் தீய எண்ணத்தோடு கண்டு தீமைக்கு ஒப்பிடுகின்றனர். நன்மை தீமையை எதிர்த்தால் நன்மைதானே நிலைக்கும். தீமையும் தீமையும் கைகோர்த்துக் கொண்டு மனிதர்களை கீழ்ப்படுத்தவும், உரிமைகளைத் தட்டிப் பறிக்கவுமுள்ள சூழ்நிலையில் கடவுளின் ஆற்றல் தீமைகளைப் பிளக்கவும் இறையாட்சி நம்மிடையே வரவும் உழைப்போம். அதற்காய் வேண்டுவோம்.

காவலன்

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916 0777 801038
கொழும்பு: T.P.: 2390128 Fax: 2399650 Mob: 0777 517019

# தேர்தலில் பங்களிப்பது எப்படி? நாளை பயிற்சிப்பட்டறை

(சில்லாலை)

எதிர்வரும் 2ந் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு, அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் விகிதாசார பிரநிதித்துவத் தேர்தல் முறை பற்றியும் அதில் எவ்வாறு வாக்களிப்பது என்பது பற்றியதுமான பயிற்சிப்பட்டறை ஒன்று நடாத தப்படவுள்ளது.

இப்பயிற்சிப்பட்டறை நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்கு யாழ்ப்பாணம் 4ம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள அகதிகள் புனர்வாழ்வு நிறுவனக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் சிறிசக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ள இப்பயிற்சிப் பட்டறையில் யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல்துறை 'விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் விளக்கவுரை நிகழ்த்தவுள்ளார். (ச-58)

# வாக்காளர் அட்டைகள் இன்று முதல் விநியோகம்

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் இன்று முதல் விநியோகிக்கப்படவுள்ளதாக தபால்மா அதிபர் சேர்வின சேனாதீர தெரிவித்துள்ளார்.

வாக்காளர் அட்டைகள் பொதியல் இடும் நடவடிக்கைகள் நேற்றுடன் முடிவடைந்துள்ளன.

தபால் மூல வாக்குகள் முத்திரையிடப்பட்டு வாக்குகள் உறுதிப் படுத்தும் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (து-61,10)

# வேலை நிறுத்தத்தைக் கைவிடுமாறு நிதியமைச்சர் சொக்ஸி வேண்டுகோள்

## போராட்டம் கைவிடப்படும் அறிகுறி

(கொழும்பு)

மக்களின் நலன்கருதி மீண்டும் வைத்தியசாலை நடவடிக்கைகளை உடன் ஆரம்பிக்குமாறு வைத்திய அதிகாரிகள் சங்கத்திடம் நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரச வைத்திய அதிகாரிகளின் சம்பள முரண்பாடுகளை விசாரணை செய்வதற்கு தேர்தலின் பின்னர் விசேட குழுவொன்று அமைக்கப் படும் என்றும், தற்போது உள்ள இடைக்கால அரசினால் இது தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பது கடினமான விடயம் என்றும் நிதியமைச்சர் வைத்தியஅதிகாரிகள் சங்கத்திற்குச் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, நிதியமைச்சரின் இந்த வேண்டுகோளை வைத்திய அதிகாரிகள் சங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (ந-61,10)

## இராணுவத்தரப்புடன்...

நடவடிக்கை எடுக்கும்படியும் அது தொடர்பான விவரமான அறிக்கையை எதிர்வரும் 20 ஆம் திகதி சமர்ப்பிக்குமபடியும் யாழ். தெரிவத்தாட்சி அதிகாரிக்கு தேர்தல் ஆணையாளர் நேற்றுமுன்தினம் மாலை செய்தி ஒன்றை அனுப்பியிருந்தார். இதன்படி நாளைய தினம் உயர் மட்ட மாநாடு கூட்டப்படவுள்ளது.

இதேவேளை, தேர்தல் ஆணையாளர் இன்று வியாழக்கிழமை கூட்டவுள்ள மாநாட்டில் கலந்துகொள்வதற்காக யாழ். அரச அதிபரும் உதவித் தேர்தல் ஆணையாளரும் கொழும்பு செல்கின்றனர்.' (த)

## தமிழ்க்கூட்டமைப்பு...

அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, தமது பிரசார வாகனங்களை வாகனங்களால் வழிமறித்த கூட்டமைப்பு ஆதரவாளர்கள் தமது வாகனத்தைச் சேதமாக்கியதுடன், துண்டுப் பிரசுரங்களைப் பறித்து தீவைத்து தகாத வார்த்தைகளால் தம்மை ஏசியதாகவும் ஈ.பி.டி.பி. வெளியிட்ட செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டது.(இ-3,5,7)

## புலிகள் மீது...

தலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இவ்வாறான நடவடிக்கைகளில் இராணுவப் புலனாய்வுத்துறையினரே ஈடுபட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ச)

## மகனை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

தனது மகனை கடந்த 4ந் திகதியிலிருந்து காணவில்லை என அவரது தாயார் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளார்.

நாவற்குழி கிழக்கு தச்சந் தோப்பைச் சேர்ந்த பதி நிரோஜன் (வயது17) என்பவரையே காணவில்லை என முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. (ச-19)

## புலிகளின்...

தாக உத்தியோகப்பற்றற்ற செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி வாக்காளர்கள் வாக்களிக்க வசதியாக போக்குவரத்து ஒழுங்குகள் அங்கும் செய்யப்படவிருக்கிறது. அத்துடன், வாக்காளர்கள் சோதனைச் சாவடிகளில் பொலிஸாரால் மட்டும் சோதனையிடப்படுவர்.

வாக்காளர்கள் தமது அடையாள அட்டைகளை மாத்திரம் கொண்டு செல்லவேண்டும், பொதிகள் எதனையும் கொண்டுசெல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதியில் 91 ஆயிரத்து 864 வாக்காளர்கள் எதிர்வரும் தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## விடுதலைப் புலிகள்...

முன்னாள் மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணா தொடர்பான விவகாரம் குறித்து லண்டனில் இருந்து வெளியாகும் தமிழ் காடியன் பத்திரிகைக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அன்ரன் பாலசிங்கம் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெளிவுபடுத்தினார்.

அச்செவ்வியில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எதிர்வரும் பொதுத் தேர்தல் மூலம் ஆட்சியைக் கைப்பற்றும் அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளை ஆரம்பித்து பேச்சுவார்த்தைகளைத் தொடருவர். இதன்போது கருணாவின் விவகாரம் எந்தவிதமான மாற்றங்களையும் ஏற்படுத்தாது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சமாதானத்தின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளார். அதற்காகவே அவர் தன்னையும் முழுமையாக அர்ப்பணித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் ஏற்பட்டிருக்கின்ற உட்பூசல்களை எவரும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவேணடாம் என்று கேட்டுக்கொண்ட அன்ரன் பாலசிங்கம், அரசியல்வாதிகள் மற்றும் படைத்தரப்பினர் அதனைச் சாதகமாக்க இணையக்கூடாது என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் பொதுத் தேர்தலில் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லக்கூடிய அரசு ஆட்சியமைக்கக்கூடிய வகையில் சிங்கள மக்கள் தமது தெரிவை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சிங்கள மக்களுக்குக் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-ச)

பதவி வெற்றிடம்

கணனி பக்க அமைப்பாளர்கள்
அனுபவம் உள்ள ஆண் பெண் இருபாலாரும்.

விளம்பர முகவர்
நிறுவனத்தில் இணைந்து வெளிக்களத்தில் பணியாற்றுதல்
வயது 25 முதல் 50 வரை

தகுதியானவர்கள் சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் 18.03.2004 இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வரவும்.

வலம்புரி,
15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

நிர்வாக உத்தியோகத்தர்

சிட்டுக் குருவிக்கென்ன கட்டுப்பாடு.....?!



ஓங்கிய பெரும் விருட்சம்.....
அதிலோர் சிட்டுக்குருவியின் சிறியதோர் கூடு
குருவிகள் சிறிதெனினும், அதன் கீர்த்திகள் பெரிது
கட்டிய கூட்டினுள் உதயசூரிய ஒளியும் இதமாகப்படவே
கீச்சுக்..... கீச்...என அவைகள் சந்தோசப்பட்டன.



எங்கிருந்தோ ஒரு கல்லு! கூட்டினில் படவே....
கூடு கலைந்தது..... காகங்கள் பறந்தன.....! குருவிகள் தனித்தன.



தனித்த குருவிகள் கூட்டினைக் கட்ட தயாராகிவிட்டன..
இனியும் காகங்கள் வராமல் இருக்க.....?
வாசலில் போட்டன பெரியதோர் 'பூட்டு'.....!
தமிழினம் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து சுயநிர்ணய
உரிமையுடன் நம் மண்ணில் வாழ்ந்திட.....
ஆதரவளிப்பீர்...

வீ.ஆனந்தசங்கரி (தலைவர்-தமிழர் விடுதலைக் கூட்டணி)
தலைமையிலான

சுயேச்சைக் குழு 1







தமிழர் விடுதலைக் கூட்டணி
-யாழ். மாவட்டம்-

அறிவித்தல்:- எக்காரணம் கொண்டும் சுயேச்சைக்குழு – 1 இத்தேர்தலில் இருந்து விலகிக்கொள்ளமாட்டாது என்பதை உறுதியுடன் தெரிவிக்கின்றோம். தயவுசெய்து வீண் வதந்திகளை நம்பவேண்டாம். (C/7441)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.03.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.